கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி

ඥාන ඔලි
GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

# அன்பில் நிலைத்திருங்கள்

(01.03.2015 - 03 பங்குனி, 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 107 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014




   

உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.




# கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில், தரம் 01ல், 2016ஆம் ஆண்டு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல் தொடர்பான விபரம்

**2016ம் ஆண்டில், கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில் விண்ணப்பப்படிவங்கள் பின்வருமாறு வழங்கப்படும்.**

| இல | பாடசாலையின் பெயர் | திகதிகள் | நேரம் |
|---|---|---|---|
| 01 | புனித சூசையப்பர் கிளைக்கல்லூரி - வத்தளை | பங்குனி 02ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரை | காலை 9.00 - பி.ப 1.00 மணி வரை |
| 02 | லொயலா கிளைக் கல்லூரி - போபிட்டிய | பங்குனி 02, 03, மற்றும் 04ம் திகதிகள் | பிற்பகல் 2.30 - 5.00 மணி வரை |
| 03 | புனித தோமையார் சர்வதேச கல்லூரி - சீதுவ | பங்குனி 02 மற்றும் 06ஆம் திகதிகள் | காலை 9.00 - 12.00 மணி வரை |
| 04 | லொயலா கல்லூரி - நீர்கொழும்பு | பங்குனி 02 முதல் 05 ஆம் திகதி வரை | பிற்பகல் 2.00 - 4.00 மணி வரை |
| 05 | புனித பேதுரு கல்லூரி - பம்பலப்பிட்டி கொழும்பு - 04 | பங்குனி 02, 03ஆம் திகதிகளில், கத்தோலிக்க மாணவர்கள்.<br>பங்குனி 04 : கத்தோலிக்க மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்<br>09ஆம் திகதி : கத்தோலிக்கர் அல்லாத மாணவர்களுக்கு | பிற்பகல் 2.00 - 4.00 மணி வரை |
| 06 | புனித லோரன்ஸ் கன்னியர் மடம் - கொழும்பு - 06 | பங்குனி 4ஆம் திகதி : புனித லோறன்ஸ் கன்னியர் மடத்தில் பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள் தற்போது கற்கும் மாணவர்களின் சகோதரிகள்<br>பங்குனி 6ஆம் திகதி : அனைத்து கத்தோலிக்க மாணவர்கள் | காலை 9.00 - 11.00 மணி வரை |
| 07 | திருச்சிலுவை கல்லூரி - களுத்துறை மற்றும் கிளைக்கல்லூரி பயாகலை | பங்குனி 5ஆம், 6ஆம் திகதிகள் | காலை 8.00 - 12.00 மணி வரை |
| 08 | கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு - 13 | பங்குனி 09ஆம் திகதி : நல்லாயன் பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்,<br>பங்குனி 10, 11 ஆம் திகதிகள் : அனைத்து கத்தோலிக்க மாணவர்கள் | காலை 8.00 - 9.00 மணி வரை |
| 09 | மாரிஸ்டெலா கல்லூரி - நீர்கொழும்பு | பங்குனி 14 | காலை 9.00 - 12.00 மணிவரை |
| 10 | புனித பெனடிக்ட் கல்லூரி - கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 | பங்குனி 14, மற்றும் 21 திகதி | காலை. 9.00 - 12.00 மணி வரை |
| 11 | புனித யூட் கல்லூரி - குரண | பங்குனி 16, 17 மற்றும் 18ஆம் திகதிகள் | காலை 7.30 - 1.30 மணிவரை |
| 12 | புனித பிரிஜட் கல்லூரி - (பாலர் வகுப்பு) கொழும்பு - 07 | பங்குனி 17,18, மற்றும் 19ஆம் திகதிகள் | காலை. 8.30 - 9.30 மணிவரை |
| 13 | தூய சம்மனசுகள் மகளீர் பாடசாலை - பயாகலை | பங்குனி 20 | காலை 11.30 - பி.ப 3.30 மணிவரை |
| 14 | ஆவேமரியா கிளைப் பாடசாலை, போலவலானை, நீர்கொழும்பு | பங்குனி 23,24 மற்றும் 25ஆம் திகதிகள் | பி.ப 12.30 - 3.00 மணிவரை |
| 15 | புனித சூசையப்பர் கிளைக் கல்லூரி, கடோல்கலே, நீர்கொழும்பு | பங்குனி 25 தொடக்கம் 27ம் திகதிகள் | காலை. 8.30 - 1.30 மணிவரை |
| 16 | திருக்குடும்ப கன்னியர் மடம் - களுத்துறை | பங்குனி 26, மற்றும் 27ஆம் திகதிகள் | பி.ப 2.30 தொடக்கம் 5.00 மணிவரை |
| 17 | கிறிஸ்து அரசர் கிளைக் கல்லூரி - வெலிவேரிய | பங்குனி 26, மற்றும் 27ஆம் திகதிகள் | காலை 8.00 - 10.30 மணிவரை |
| 18 | டி மெசனட் கல்லூரி - கந்தானை | பங்குனி, 28ஆம் திகதி<br>பங்குனி 29ஆம் திகதி | காலை 8.00 - 1.30 மணிவரை<br>காலை 10.00 - 1.30மணிவரை |
| 19 | திருக்குடும்ப கன்னியர் மடம் - கொழும்பு - 04 | சித்திரை 06 மற்றும் 07ஆம் திகதிகள் | காலை 8.00 - 12.00 மணிவரை |
| 20 | புனித பேதுரு கிளைக்கல்லூரி - உடுகம்பொல, கம்பஹா | சித்திரை 06,07 மற்றும் 08ஆம் திகதிகள் | பி.ப 2.30 - 5.30 மணிவரை |
| 21 | திருச்சிலுவை கல்லூரி - கம்பஹா | சித்திரை 09, 10 மற்றும் 11ஆம் திகதிகள் | காலை 8.00 - 12.00மணிவரை |
| 22 | ஆவே மரியா கன்னியர் மடம் - நீர்கொழும்பு | சித்திரை 17 : ஆவே மரியா பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள்,<br>பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்கள் சித்திரை 18ஆம் திகதி ஏனைய மாணவர்கள் | காலை 8.30 - 2.00 மணிவரை<br>காலை 8.30 - 12.00 மணிவரை<br>பி.ப 1.30 - 3.30 மணிவரை |
| 23 | கிறிஸ்து அரசர் கல்லூரி - பன்னிப்பிட்டிய | சித்திரை 23 மற்றும் 24 திகதிகள் | காலை 8.00 - 11.00 மணிவரை |
| 24 | வெற்றிமாதா மடம் - மொறட்டுவ | சித்திரை 27, 29 திகதிகள் | காலை 9.00 - 12.00 மணிவரை |
| 25 | புனித சூசையப்பர் கல்லூரி, மருதானை, கொழும்பு - 10 | சித்திரை 27 தொடக்கம் 30 வரை | காலை 9.00 - 1.00 மணிவரை |
| 26 | நல்லாயன் கன்னியர் மடம் - பானந்துரை | சித்திரை 29 மற்றும் 30ஆம் திகதிகள் | காலை 11.00 - 1.00 மணிவரை |
| 27 | புனித சூசையப்பர் ஆண்கள் கல்லூரி - நுகேகொடை | வைகாசி 01 தொடக்கம் 31ஆம் திகதி வரை | காலை 7.30 - 1.30 மணிவரை |
| 28 | புனித செபஸ்டியன் கல்லூரி - மொறட்டுவை | வைகாசி 05 தொடக்கம் 08ஆம் திகதி வரை | காலை 8.30 - 12.00 மணிவரை |

## குறுங்கால கற்கை நெறி

கொழும்பு உயர் மறைமாவட்ட புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்லூரி, தமிழ்ப்பிரிவு எதிர்வரும் 14.03.2015 சனிக்கிழமை, கிறிஸ்தவ குடும்ப வாழ்க்கையை மையமாகக் கொண்டு இன்னுமொரு குறுங்கால கற்கைநெறியை ஆரம்பிக்கவுள்ளது. கொழும்பு உயர் மறைமாவட்டம் இவ்வருடத்தை குடும்ப ஆண்டாக பிரகடனம் செய்திருப்பதால், குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்கட்கும் இதோர் அரிய சந்தர்ப்பமாகும்.

இக்கற்கைநெறியானது 14.03.2015 சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து வரும் ஒன்பது சனிக்கிழமைக் மாலை 4.30 - 6.30 மணிவரை, புனித அக்குவைனஸ், தமிழ் இறையியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். கற்கைநெறியின் இறுதியிலே 80% மான விரிவுரைகட்கு சமூகமளித்தோர்க்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இம்முறை இக்குறுங்கால கற்கைநெறியை அருட்தந்தை. லொயிட் சாந்திகுமார் அடிகளார் நடாத்துவார். கற்கைநெறிக் கட்டணமாக ஒருவரிடமிருந்து ரூபாய் 500/-ம் அறவிடப்படும். அனைவரும் திரண்டு வந்து பயன் பெறவும்.

**அருட்தந்தை றெஜினோல்ட், அ.ம.தி**
**இயக்குனர்.**

1. விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள உங்களது குடும்ப புத்தகம், குழந்தை திருமுழுக்கு பெற்றதற்கான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் அவசியம். இவ் ஆவணங்களை ஒவ்வொரு பாடசாலைக்கும் ஏற்றவிதத்தில் சமர்ப்பிப்பதுடன், விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள திருமுழுக்கு சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் போதுமானது, அதனை பரீசிலித்துவிட்டு மீண்டும் உங்களுக்கே திருப்பிக் கொடுக்கப்பம். ஆனால் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் போது பிரதிகளை மாத்திரம் கொடுத்தால் போதும். குழந்தைகளை பாடசாலையில் சேர்க்கும் போது முதற் பிரதிகளை கொடுத்தல் அவசியமாகும்.
2. விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை அனுமதி வழங்குவதற்கு போதிய இடவசதியின்மையின் காரணமாக, அரசாங்க பாடசாலைகளிலும் பிள்ளைக்கான விண்ணப்பங்களை கோரவும்.
3. மேலும் பணம் பெறும் நோக்குடன் அனுமதியினை பெற்றுத்தருவதாக கூறும் நபர்கள் மட்டில் உங்கள் கவனத்தை செலுத்துவதோடு, அத்தகையவர்கள் பற்றிய விபரம் அறிந்தால் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அருட்பணி. ரஞ்சித் மதுராவல, கொழும்பு உயர் மறைமாவட்ட கல்வி**
**இயக்குனர்,**
**கத்தோலிக்க தனியார் பாடசாலை, அதிகாரி**

ஞான ஒளி GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
01,பங்குனி மாதம், 2015 ஞாயிற்றுக்கிழமை.

## செபம் என்பது எமது உள் ஆழத்திலிருந்து வரவேண்டும். நாம் வெறும் உதட்டளவோடு செபிப்பவர்களாக இருந்தால் மனவலிமை எமக்கு ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை. ஞானத்தோடும், தூய ஆவியின் துணையோடும் நாம் செபிக்க கற்றுக்கொள்ள வேண்டும்

தவக்காலத்தில் தான் அதிகமாக செபங்கள் செய்ய வேண்டும். சிலுவைத்தியானங்கள் செய்ய வேண்டும் என்று பலரும் விரும்புவர். சிலுவையின் முன்பு பல மணிநேரங்கள் செலவளிப்பர். கிறிஸ்துவின் பாடுகளை மிக உருக்கமாக தியானிப்பர். ஆனால் தம் வாழ்க்கையில் ஏற்படும் பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது தவிப்பர். கிறிஸ்துவின் பாடுகளை உண்மையாக தியானிப்போர் நிச்சயம் தம் வாழ்க்கையின் சுமைகளையும் தாங்கும் மனவலிமை கொண்டடோராகத் தான் இருப்பர். செபம் என்பது எமது உள் ஆழத்திலிருந்து வரவேண்டும். நாம் வெறும் உதட்டளவோடு செபிப்பவர்களாக இருந்தால் மனவலிமை எமக்கு ஒருபோதும் கிடைக்கப் போவதில்லை. ஞானத்தோடும், தூய ஆவியின் துணையோடும் நாம் செபிக்க கற்றுக்கொள்ள வேண்டும் இதற்கு நல்ல தருணந்தான் இத்தவக்காலம்.

நமது வாழ்க்கையில் மீண்டும் ஒரு தவக்காலம் வருமா என்பது நிச்சயமற்றதொன்று. நேற்றைய தினமும் கடந்த காலங்களும் கண்ணீரும், கவலையும், வேதனையும், சோதனையும், தவறுகளும், குறைகளும் நிறைந்ததாக இருக்கலாம். நாம் செய்த அனைத்து தீமையான செயல்களும், பேச்சுக்களும் கடந்த காலமும் நமக்கு இன்று சொந்தமுமில்லை. அதுபோல் நாளைய தினம் என்று ஒன்று நமக்கு கிடைக்குமா என்பது நமக்குத் தெரியாது. நாளைய தினம் இறைவனுக்கு சொந்தமானது. எமக்கு நாளைய தினம் ஒன்ற பிறக்குமாயிருந்தால், இறைவனில் நமக்கு அன்பும், விசுவாசமும் இருக்குமாயிருந்தால், நாளைய தினத்தை எதிர்கொள்ள இறைவன் எனக்கு ஆற்றலையும், சக்தியையும் மன வலிமையையும் நிச்சயம் தருவார். நேற்றைய தினத்தையும், நாளை தினத்தையும் எண்ணி கலங்கி தவித்துவிடாமல் இறைவனில் தங்கி வாழ்பவர்களாக அவரிடம் எம்மை முழுமையாக ஒப்படைப்பவர்களாக வாழ்வோம். நேற்றைய தினத்தில் நடந்தது யாவும் நன்மைக்கே. இன்று நடப்பதும் நாளை நடக்கவிருப்பதும் நன்மைக்கே என விசுவசிப்போம் நாளைய தினம் எம்முடையதல்ல. இன்றைய தினம் நாம் செய்ய தகுந்த, முடிந்த வேலைகளை, நன்மைகளை செவ்வனே மகிழ்ச்சியோடு செய்து முடிப்போம். நமக்குத் தரப்பட்டிருக்கும் இத்தவக்காலத்தை தகுந்த விதத்தில் பயன்படுத்துவோம்.

இன்றைய காலகட்டத்தில் நாம் செபிப்பதற்கு பெரிதும் தடையாய் இருப்பதில் ஒன்றாக கையடக்கத் தொலைபேசி உள்ளது. உண்மைதான் இன்று ஆலயங்களிலும், சரி வீடுகளிலும் சரி கையடக்க தொலைபேசிகளை பார்த்துப் பார்த்துதான் செபங்களும் செபமாலைகளும் கூறப்படுகின்றன. புதிதாக இவ்வுலகிற்கு தாயின் வயிற்றிலிருந்து வருகைத் தந்த குழந்தை ஒன்று, எனக்கு கையடக்கத் தொலைபேசி கொஞ்சம் தாருங்கள் நான் இந்த பூமிக்கு எந்த வித குறைவின்றியும் வந்துவிட்டேன் என்று இறைவனுக்கு செய்தி அனுப்ப வேண்டும் என்று கூறியதாம். அந்தளவிற்கு இன்று ஊடகங்கள் வளர்ந்துவிட்டன. ஒரு மரத்தை செதுக்கி சிலுவை செய்யத் தெரிந்த மனிதனுக்கு நல்லதொரு மனிதனாகவோ, நல்ல கிறிஸ்தவனாகவோ வாழத் தெரியவில்லை ஏன்? அவன் இன்னமும் இறைவனை நம்பவில்லை. மாறாக உலகத்தை மட்டும் நம்பி வாழ்பவனாக இருப்பதால்தான்.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**

# இணக்கமான வாழ்வில் அன்பு




மகிழ்ச்சியான மனநிலையை பெறுவது ஒரு வாய்ப்பு. அந்த இணக்கமான வாய்ப்பு அன்பிலிருந்து தான் முதலில் கிடைக்கிறது. அன்பு நம்மை ஒன்றிணைக்கிறது மற்றும் முழுமையடையச் செய்கிறது. அன்பு இயல்பாக மலர்வது. அதைப் பயிற்றுவிக்க முடியாது. நாம் ஆன்மீகத்தில் திளைக்கும்போது மன அமைதியும், மனநிறைவும் ஏற்படுகிறது. இதனை “மீக்கா” இறைவாக்கினர் “நேர்மையை கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார்” கழுவித் தூய்மைப்படுத்தி தீச்செயலை அகற்றிடுங்கள் நன்மையைச் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்(எசா 1:16-17).

நற்செய்தியில் எது முதன்மையான கட்டளை? அதற்கு இயேசு, “நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர், உன் முழு உள்ளத்தோடும், ஆற்றலோடும் அவரை அன்பு கூர்வாயாக, இரண்டாவது உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக. இவற்றை விட வேறு கட்டளை எதுவும் இல்லை.

எனவே, தவக்காலத்தில் இருக்கும் நமக்கு, நம் வாழ்க்கைக்கு இரண்டு பெரும் காரியங்கள் உள்ளன.

1. கடவுளைத் தெரிந்து கொள்வது.
2. அவரில் அன்புக் கொள்வது.

அன்பே பாவத்தை ஒழிப்பதற்கு துணை நிற்கும். கடவுளோடு ஒன்றித்து நிலைவாழ்விற்கு அழைத்துச் செல்லும்.

நான்கு கிரேக்க வார்த்தைகள் வேறு வேறு இடங்களில் “அன்பு” என்ற வார்த்தைக்கு பொருள் தருகிறது. அவை (Agape) அகப்பே, (phileo) பில்லோ, Storage) ஸ்டோர்ஸ் மற்றும் (Eros) இர்ரோஸ் இதில் Eros தவிர்த்து மற்ற மூன்று வார்த்தைகளையும் திருவெளிப்பாட்டில் பயன்படுத்துகின்றார்கள்.



Agape :

“கடவுள் அன்பாகவே இருக்கிறார்” என்ற நற்செய்தியில் agape வார்த்தப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடவுள் உலகத்தின் மீது அன்பு கூர்ந்ததனால் தம் ஒரே மகனையே இவ்வுலகிறகு அளித்தார். எனவே agape என்பது உணர்ச்சிகளினால் தூண்டப்பட்ட வெளிப்பாடு அல்ல. மாறாக ஒருவரின் இணக்கமான உள்ளார்ந்த, ஈடுபாட்டின் வெளிப்பாடு இது தன்னலமற்ற அன்பு.

Phileo :

“இந்த வார்த்தை” ஒருவர் மீது நீங்காத பற்றுருதியுடன் மிகவும் நெருக்கமாக பழகுவதால் வருவது. நண்பர்களிடம் மற்றும் பொருட்களிடம் நாம் கொண்டுள்ள பற்றுருதியைக் குறிக்கும்.

Storge:

இது இயற்கையாகவே, உறவுகளிடத்தில் நாம் காட்டும், பாசம், நேசம், என்று சொல்லலாம் தாய் - பிள்ளைகளிடத்தில், கணவன் மனைவியிடத்தில் கொண்டுள்ள அன்புறவு.

எனவே உயிர்கள் எலும்புடன் கூடியே உடம்போடு பொருத்தி இருப்பது அன்புடன் பொருந்திய வாழ்க்கை வாழ்வதற்கு. இயேசுவின் வாழ்க்கை முறையையும் அவருடைய வார்த்தைகளையும் காணும் இடத்தில் இயேசு ஒரு மனிதராக பிறரோடு இணக்கமான அன்பினில் மனித மாண்புகளுடன் வாழ்ந்தார். திருவிவிலியத்தை வாசிக்கும்போது “8” வயையான அன்பைப் பற்றி தெரிந்துக் கொள்ள முடியும் அவை

1. கடவுள் மீது அன்பு (agape)
2. நம் மீது நாம் கொண்டுள்ள அன்பு
3. பற்றுதலோடு கூடிய அன்பு
   - தன்னுடைய வாழ்க்கை துணையை அன்பு செய்தல்
   - தன் குழந்தைகளை அன்பு செய்தல்
4. தான் வாழும் சமுதாயத்தை அன்பு செய்தல்
5. நம் அயலாரை அன்பு செய்தல்
6. சமுதாய நீதி மற்றும் மனித அடிப்படைத் தேவைகளை பிறருக்கு வழங்குவதில் செய்யப்படும் அன்பு
7. இயற்கையை அன்பு செய்தல்
8. இறுதியாக நமது பகைவர்களை அன்பு செய்தல்

« » தொடர்ச்சி 15ம் பக்கம் « »

## உண்மை உறைக்கும் கமிலஸ்






# திருத்தந்தை பிரான்சிசின் பார்வையில் நற்செய்திப்பணி

> “ஆவியில் நிறைந்த நற்செய்தியாளர்கள் இறைவார்த்தையைக் கேட்டு தியானிக்கும், செபிக்கும் நற்செய்திப் பணியாளராவர். மகிழ்ச்சி நிறைந்த, மனச்சோர்வு அடையாத, நற்செய்தி அறிவிப்பிலும், பகிர்விலும் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர். உண்மைக்கு சாட்சிபகர்ந்து, இறையாட்சி இலட்சியத்துடன் வாழ்ந்த இயேசுவைத் துணிவுடன் பின்பற்றுவர்”



**‘நற்செய்தியின் மகிழ்ச்சி’** எனும் அப்போஸ்தலிக்க ஏட்டை திருத்தந்தை பிரான்சிஸ் 2013ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி அகில உலக கத்தோலிக்க சமூகத்திற்கு வழங்கினார். அதில் சிறப்பாக நற்செய்தியின் மகிழ்ச்சியை வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் பகிர்ந்து **‘நற்செய்திப் பணிச் சீடர்களாக’** வாழ அனைத்து திருமுழுக்குப்பெற்ற கத்தோலிக்க கிறிஸ்தவர்களையும் அழைக்கின்றார் (நசெம. 120). கிறிஸ்தவர்கள் அனைவரும் நற்செய்தி அறிவிப்புப் பணியாளராக கடவுளால் அழைப்பப் பெற்றவர்கள் (எசா. 49:15-16, யோவா. 3:16). நம் அன்பும், மகிழ்சியும் நிறைந்த வாழ்வால் (1தெச.5:16, 1கொரி. 13:1-10) நற்செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற திருத்தந்தையின் உறுதிப்பாட்டை இவ்வேட்டில் காணலாம். இங்கு இவ்வேட்டில் காணப்படும் முக்கிய படிப்பினைகள் குறிப்பிடப்படுகின்றன.

## நற்செய்தியின் மகிழ்ச்சிக்கான காரணம் [நசெம. அதி.1]

இயேசுக் கிறிஸ்துவே **‘எக்காலத்துக்கும் அறிவிக்கப்படும் நற்செய்தி ஆவார் (திவெ. 14:6). அவரது பேரன்பால் நாம் ஆட்கொள்ளப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்கான முதல் காரணமாகும்’** (1. யோவா. 4:19, 2கொரி. 5:14, உரோ. 5:5). மேலும், இயேசுவின் பிறப்பை இடையர்களுக்கு அறிவித்த வானதூதர் அவர்களிடம் **‘அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்**” (லூக் 2:10) என்பது வாழ்வளிக்கும் நற்செய்தியை நமக்கு அளித்தது இறை தந்தையின் திட்டம் என்பதை வெளிப்படுத்துகின்றது. அவரது திட்டத்தை தியானித்து, அதில் இன்பம் காண்பவர் பேறுபெற்றவராகின்றார் (யோசு. 1:8, எபே. 2:18, 2 இரா.1:4). இன்னும், **‘அது வாயில் கசக்கும், ஆனால் வயிற்றில் தேனைப்போல் இனிக்கும்’** (எசே.2:8, 3:3) என்பதும் இறைவார்த்தை நம் வாழ்வுக்கு ஆற்றல் அளிக்கின்றமையும் மகிழ்சிக்குக் காரணமாகும் (எசா.55:10-11, 2திமொ. 3:13-17, எபி.4:12).

தொடக்க கிறிஸ்தவர்கள் இயேசுவின் நாமத்தில் ஒன்றுகூடிய போதெல்லாம் மகிழ்ச்சியடைந்தார்கள் (திப. 2:46). திருத்தூதர்கள் சென்றபோதும் **‘பெரும் மகிழ்ச்சி கொண்டார்கள்’** (திப. 8:8). அவர்கள் துன்புறுத்தப்பட்டபோதும் **‘மகிழ்ச்சியில் திளைத் திருந்தார்கள்’** (திப. 13:52). எத்தியோப்பிய அரசு அலுவலர் இறைவார்த்தையைக் கேட்டு, திருமுழுக்குப் பெற்று **‘மகிழ்ச்சியோடு தம் வழியே சென்றார்’** (திப. 8:39). ஆக, இயேசுவை சந்திப்பதாலேயே மகிழ்ச்சி நம் இதயங்களை நிரப்புகிறது (யோவா. 16:20, 20:20) நற்செய்தியின் மகிழ்ச்சி நம்மில் புதுப்பிக்கப்படுகிறது. இதனால்தான் புனித பாவுலு நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிப்பதை தம்மீது சுமத்தப்பட்ட கடமையாகக் கொண்டார் (1கொரி. 1:14).

## நற்செய்தியின் மகிழ்ச்சி அறிவிப்பில் தடைகள் [நசெம. அதி. 2-3]

இன்றைய நுகர்வுக் கலாச்சாரத்தின் விளைவாக வளர்ந்து வரும் போதாது என்ற மனநிலை, பிறருக்குரியதைச் சுரண்டும், ஏமாற்றிப் பெறும் மகிழ்வுப் போக்கு, பயன்கருதி பொருள்பெறும்-எறியும் மகிழ்வு மனநிலை, வளரும் வக்கற ஆசையும், வன்முறை உறவுகளும் என அறம்புறண்ட மனப்போக்குகளால் மழுங்கடிக்கப்பட்ட மானிட மனச்சாட்சி என்பன நாடும், தேடும், வேட்கைகொண்டு அடையும் மகிழ்ச்சி, நற்செய்தியின் மகிழ்ச்சிக்கு முரணாணதாகும். இதனால் இன்று கடவுளுக்கு ஏற்புடையதைச் செய்ய முரண்டுத்தனமாக மறுப்பதும், பொதுநலன் பேணுவதில் நாட்டமின்மையும், சுயநல, குறுகிய நோக்குகளை அடைவதற்கு இசைவு-இணக்க கூட்டுச்சேர்தலில் ஈடுபடுவதும் என மானிட சமூக வாழ்வுக்கு பாதிப்பையும், அதனால் சமூக மகிழ்வைச் சிதைக்கும் நிலையையும் காணலாம்.

இதுபோன்ற பின்புலத்தில் நற்செய்தியின் மகிழ்ச்சியை எடுத்துரைப்பதற்கு ஆர்வமின்மை காணப்படுகின்றது. போதிய நற்செய்தி வாசிப்பு இன்மை நிலவுகிறது. தியானமும், ஆயத்தமும் இன்றி நற்செய்தி மறையுரைகள் ஆற்றப்படுகின்றன. இதனால் நற்செய்தியால் அடைய வேண்டிய புதுப்பித்தலை கிறிஸ்தவர்கள் அடைய முடியாமல் இருக்கிறார்கள். அரைகுறை மனநிலையுடனும், மதில்மேல் பூனை போன்ற மனநிலையுடனும் இருக்கும் கிறிஸ்தவர்கள் நற்செய்தியின் ஆற்றலால் பெறக்கூடிய வாழ்வை பெற முடியாதிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தம்மிடையே இயேசுக் கிறிஸ்துவைப்பற்றி பேசிப் பகிராத நிலையும், கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்காத நிலையும் காணப்படுகின்றது. இக்குறைபாடுகள் களையப்படுவதற்கு கிறிஸ்தவர்கள் சமூகமாக கேட்டுக் கற்றிந்த நற்செய்தியை மீண்டும் கேட்பதோடு மட்டும் நின்றுவிடாமல், வாழவும் (யாக. 1:22), அதனை அறிவிக்கவும் கடமையும், பொறுப்பும் கொண்டவர்கள் (1கொரி. 1:14) எனத் திருத்தந்தை தெளிவாக எடுத்துரைக்கின்றார். நற்செய்திக்குப் பிரமாணிக்கமற்ற கிறிஸ்தவ வாழ்க்கை பயனற்ற, இலக்கு இல்லாத ஓட்டம் என்கிறார்.

## நற்செய்தியின் சமூகக் கண்ணோக்கு [நசெம. அதி. 4]

நற்செய்தியின் மகிழ்ச்சி என்பது **‘சின்னஞ் சிறியவர்களில் எவரும் தொலையக் கூடாது’** என இறை தந்தைந்தை கொள்ளும் மகிழ்ச்சியாகும். அம்மகிழ்ச்சி காணாத ஆட்டைத் தேடிக் கண்டடைந்து, கிடையில் சேர்த்த நல்லாயனின் மகிழ்ச்சியாகும். இன்றைய உலகில் பல்வேறு சமூக சூழல்களில் தொலைந்து போகின்ற, ஒதுக்கப்படுகின்ற, காயப்பட்ட, இயல்பு வாழ்வுக்காக வழி தேடுகின்ற, மக்கள் நிறைவாழ்வு பெறுவதற்கு நற்செய்தியின் அடிப்படையில் பொதுநலனைப் பேணுவதற்கு சமூக உரையாடல் வேண்டும் என்பது திருத்தந்தையின் அறிவுரையாகும். ஏனென்றால் நற்செய்தி அமைதியளிக்கும் நற்செய்தியாகும்.

அத்தகைய உரையாடல் கிறிஸ்தவ ஒன்றிப்பிலும், பல்சமய இணக்கத்திலும் மானிட வாழ்வியல் நிலைகளையும், தேவைகளையும் மையங்கொண்டதாக நடைபெற வேண்டும் என ஆசிக்கிறார். சமூக பொதுநலனைப் பேணுவதற்கு நடத்தப்பட வேண்டிய உரையாடல் நற்செய்தி விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், கிறிஸ்தவ ஒன்றிப்பு முதற்கண் தேவை என்கிறார். கிறிஸ்தவ ஒன்றிப்பில் நடத்தப்படும் உரையாடல் வழியாகவே கிறிஸ்தவர்களின் நம்பகத் தன்மை கொண்ட சாட்சியம் வெளிப்படும்.

இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தி ஒன்றேயாகும். எனவே கிறிஸ்தவ ஒன்றிப்பில் அனைத்து சமத்தவருடனும் இணக்கத்துடன் சமூக அமைதிக்காக உரையாட அழைக்கிறார். சமூக அமைதியை நீதியின் வழியில் நாடுவதே சிறப்பு என்கிறார். இன்று சமயங்களால் சமூகத்துக்கு என்ன நன்மை கிடைக்கிறது என திருத்தந்தை கேட்பது நம்மைச் சிந்திக்கச் செய்கிறது. இன்று எச்சமயத்தையும் சேராமல் பொதுமைச் சமய உணர்வுடன் பலர் உள்ளார்கள். அவர்கள் நன்மைத்தனம், உண்மைத்தனம், என்பதில் நம்பிக்கை கொண்டவர்களாவர். இவ்விழுயங்கள் கிறிஸ்தவர்களுக்கு இறையாட்சி விழுமியங்களாகும் (உரோ.14:17). ஆக கிறிஸ்தவ ஒன்றிப்பில் இவர்களையும் இணைத்து சமூகப் பொதுநலன் பேண வழிகிடைக்கச் செய்யும்போதே அமைதியும், அதனால் மகிழ்ச்சியும் கைகூடும் என்கிறார் திருத்தந்தை.

## நற்செய்திப் பணியாளர் ஆவியால் நிறைந்தவர்கள் [நசெம. அதி. 5]

முதற்பெந்தக்கோஸ்தே நாளில் ஆவியால் நிறையப்பட்டவர்கள் திறந்த, துணிவான, யூத-கலாச்சார வரம்புகளைக் கடந்து எங்கும் செல்கின்ற, எல்லாருடனும் உரையாடுகின்ற, பல்லாற்றல் கொண்ட கிறிஸ்தவ குழுமங்களை அமைக்கின்ற பக்குவத்தைப் பெற்றார்கள். இன்றும் புதிய பெந்தக்கோஸ்தே அனுபவத்தை கிறிஸ்தவர்கள் பெற்று நற்செய்திப் பணியாளராக வேண்டும் என்கிறார் திருத்தந்தை. ஆவியில் நிறைந்த நற்செய்தியாளர்கள் இறைவார்த்தையைக் கேட்டு தியானிக்கும், செபிக்கும் நற்செய்திப் பணியாளராவர். மகிழ்ச்சி நிறைந்த, மனச்சோர்வு அடையாத, நற்செய்தி அறிவிப்பிலும், பகிர்விலும் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர். உண்மைக்கு சாட்சிபகர்ந்து, இறையாட்சி இலட்சியத்துடன் வாழ்ந்த இயேசுவைத் துணிவுடன் பின்பற்றுவர். நாம் இறைதந்தையின் மகிமையையே தேடி, நாம் வாழ்வதும் இயங்குவதும் அவரது மகிமையான புகழ்ச்சிக்காகவே என சங்கற்பம் கொள்பவர்கள் ஆவியால் நிறைந்த பணியாளர்களாவர்.

முடிவாக, திருத்தந்தை நற்செய்தியின் மகிழ்ச்சி என்ற ஏட்டின் வழியாக நற்செய்திப்பணி நம் பாரம்பரிய முறைகளைத்தாண்டி பரந்து செல்ல வேண்டும் என்ற தூண்டுதலைத் தருகிறார். முதலில் திருமுழுக்குப் பெற்ற அனைத்துக் கிறிஸ்தவர்களும் நற்செய்திப்பணி அவர்களுக்கு இறைவனளிக்கும் அழைப்பு என ஏற்கவேண்டும் என்கிறார். நற்செய்தி எல்லாருக்கும் ஒன்றே என்பதால் கிறிஸ்தவ ஒன்றிப்பே நற்செய்திப்பணியின் **‘கத்தோலிக்கத்தைக்’** காக்கும், நம்பகத்தன்மையை அளிக்கும், வழியாகும் என்கிறார். எச்சமயத்தவராயினும், எல்லா நன்மனங்கொண்டவர்களும் நம்பும், நாடும் விழுமியங்கள் கிறிஸ்தவர்கள் நம்பும், ஏற்கும் இறையாட்சி விழுமியங்கள் என்பதால் அனைவருடனும் இணைந்து சமூகநலனைப் பேணி, நீதியின் அடிப்படையில் அமைதி காத்து, மகிழ்திருப்பதே நற்செய்தி வாழ்வு என்கிறார்.

*ஆக்கம்*
*ஜெராட் டீ ரொசய்ரோ, அ.ம.தி.*

அருட்பணியாளன் போல் றொகான்
யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்பு இயக்குநர்

# ஏனைய திருத்தந்தையர்களில் இருந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வேறுபடுத்துவது யாது?




இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கத்தோலிக்க திருச்சபையின் மறுமலர்ச்சியாக அமைந்தது. அது சுய நீதிமான்களின் கூட்டம் என அழைக்கப்பட்ட திருச்சபையை மனித மயப்படுத்தி, திருநிலைக் குருத்துவத்திலும் பொதுநிலைக் குருத்துவத்திலும் அதிகளவான பங்கேற்புக்காக தனது கதவுகளை திறந்து வைத்தது. இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் பின் ஐம்பது ஆண்டுகளுக்கு பிற்பாடு திருச்சபைக்கு மற்றொரு புத்துயிர்ப்பு. இம்முறை திருச்சபையின் மறுமலர்ச்சி நேரடியாக புனித பேதுருவின் அதிகார நாற்காலியுடன் இணைக்கப்பட்டதாக, அதன் "அதிகார நாற்காலியில்" (ex cathedra) இருந்து வருகிறது. நம் காலத்தில், திருச்சபை வரலாற்றில் முதல் முறையாக ஒரு திருத்தந்தை தனது "அதிகார நாற்காலியில்" இருந்து, பொதுவாக ஒரு திருத்தந்தை சாதாரணமாகப் பேசுவது போலல்லாது, தனது சொல்லிலும் செயலிலும் பேசப்படும் விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார். புகழ் பெற்ற 'டைம்' (TIME) பத்திரிகை புனித பேதுருவின் அதிகார நாற்காலிக்கு உயர்த்தப்பட்ட ஒன்பது மாதங்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை "2013 ஆண்டின் நபர்" என்று பெயரிட்டதில் ஆச்சரியமேதுமில்லை. அப்பத்திரிகை திருத்தந்தை பிரான்சிஸ் பற்றிய தனது ஆய்வில், வெறும் ஒன்பது மாத கால திருத்தந்தை நிலையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒரு மதத்தலைவரிடம் நாம் எதிர் பார்ப்பதை மீள் வரையறை செய்தார் என்றும், திருத்தந்தை என்பவர் "மனசாட்சியின் ஒரு புதிய குரல்" என்றும் அழைத்துள்ளது. அதே விருதை அவருக்கு முன் இருந்த இரண்டு திருத்தந்தையர்கள், அதாவது இப்போது புனிதர்களான 23ம் யோவான் அவர்களும், 2ம் யோவான் பவுல் அவர்களும் பெற்றிருந்தார்கள். ஆனால் அவ்விருதை பெற தகுதியுடைவர்களாக தம்மை நிரூபிக்க திருத்தந்தை நிலையில் அவர்களுக்கு சில ஆண்டுகள் அவர்களுக்கு எடுத்தன.

இந்த கட்டுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2013 பங்குனி 13ல் பதவியேற்ற பின்னர், விவிலிய விழுமியங்களை தனது செயற்பாடுகளால் வெளிக் கொணர்ந்த அவரது திருத்தந்தை பதவியின் வரையறுப்பான தருணங்களை நோக்குவோம்.

## 1, பணியாளர்களின் பணியாளன் (யோவான் 13: 1–17)

"துயரங்களின் ஊழியன்" என்ற எசாயா இறைவாக்கினரின் உருவகத்தில் இருந்து (எசாயா 52:13-53:12) தனது திருத்தந்தை பதவியின் இரண்டு வாரங்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பாரம்பரிய புனித வியாழன் சடங்குகளின் ஒரு பகுதியாக உரோம் சிறையில் வைக்கப்பட்டுள்ள 12 கைதிகளின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டார். வழக்கத்திற்கு மாறான ஒரு சம்பவமும் இடம் பெற்றது. அந்தப் பன்னிருவரில் இருவர் பெண்கள். அவர்களில் ஒருவர் இஸ்லாமியர். "நீங்கள் என்னைப் போதகர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. நான் போதகர்தான், ஆண்டவர் தான்". (யோவான் 13:13)

## 2, அவரது எளிமையான உறைவிடம் (மத்தேயு 8:20)

திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு எளிமையான, சாதாரண வாழ்க்கை வாழ விரும்பி திருத்தந்தைக்கே உரிய அடுக்கு மாடி குடியிருப்பு தவிர்த்தார். அவர் வத்திக்கான் மரபுகளை உடைத்து வத்திக்கானின் தங்ககம் ஒன்றில் தங்குவதற்கான தெரிவை மேற்கொண்டார். இது அவருக்கு மிகவும் பிடித்திருந்த எளிமையான, சாதாரண வாழ்க்கை முறைமைக்கும், அங்கே வரும் சாதாரண மக்கள் மற்றும் திருநிலையினருடன் நெருங்கிப் பழகி ஒன்றாக சேர்ந்து உணவருந்துவதற்கும் வாய்ப்பாக அமைந்தது. திருத்தந்தை நிலைக்கேயுரிய ஆடம்பரமான ஆடை அணிகலன்களுக்குப் பதிலாக ஒரு சாதாரண வெள்ளை தொப்பியையும் அங்கியையும் விரும்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத்தந்தையின் அடுக்கு மாடி குடியிருப்புக்களைப் பார்த்த முதல் தருணத்திலேயே "இங்கே 300 பேர் தங்க இடம் உள்ளதே" என்று ஆச்சரியப்பட்டார். "...நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மானிடமகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை". (மத்தேயு 8:20)

## 3, இளமையின் சின்னம் (லூக்கா 18:16)

இளைஞர்களைக் மிகவும் கவர்ந்த முதலாவது திருத்தந்தை இவரே. அவர் எங்கு சென்றாலும் அவர்கள் அவரை சூழ்கிறார்கள். அவரைப் பார்க்கும்போது அவர்கள் ஒரு கும்பல் போல உற்சாகமும் வேகமும் உள்ளவர்களாக மாறுகின்றனர். பிரேசிலின் ரியோ டி ஜனேய்ரோவில் (Rio de Janeiro) நடந்த இவரது முதல் உலக இளைஞர் தினம் ஒரு அதிர்வுகளின் தொகுப்பு. 3 மில்லியனுக்கு மேற்பட்ட இளைஞர்கள் பிரபல அதிரடி நட்சத்திரங்களின் இசை நிகழ்வுகள் இடம்பெறும் புகழ்பெற்ற கோபாகபனா (Copacabana) கடற்கரைகளை மழைக் கால நிலையையும் பொருட்படுத்தாமல் திருத்தந்தையைக் கௌரவிக்க ஆக்கிரமித்துக் கொண்டார்கள். எந்த ஒரு அதிரடி இசை நட்சத்திரமும் இது போன்ற ஒரு இளைஞர் கூட்டத்தை கோபாகபனா (Copacabana) கடற்கரையில் பெற்றதில்லை. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் முதல் உலக இளையோர் தினம் ஒரு பெரும் முழக்கமிடும் வெற்றியானது. இவ்வாறு ஒரு அதிரடி நட்சத்திர ஈற்புக் கொண்ட முதலாவது ஆன்மீகத் தலைவர் ஆனார். "... ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது". (லூக்கா 18:16)

## 6, கத்தோலிக்க சமூக போதனைகள் (லூக்கா 12: 16–21)

திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு முறை இவ்வாறு தெரிவித்தார். "நான் கம்யூனிஸ்ட் அல்ல. நான் வெறுமனே கத்தோலிக்க சமூக கோட்பாடுகளைப் பின்பற்றுபவனாக இருக்கிறேன்." இதனை திருத்தந்தை அவர்கள் La Stampa என்ற இத்தாலிய நாளேட்டுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். திருத்தந்தை அவர்கள் "தடங்கலற்ற முதலாளித்துவம்" என்பது "புதிய கொடுங்கோன்மை" என்றும் "பணத்தை வழிபடுதல்" என்றும் 2013 கார்த்திகை 13ல் பிரகடனப்படுத்திய "மகிழ்வின் நற்செய்தி" (Evangelii Gaudium) என்ற தனது முதல் அப்போஸ்தலிக்க திருமடலில் விமர்சனங்களை வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்தே தனது செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கே திருத்தந்தை அவர்கள் "நான் ஒரு காயம்பட்ட, வலியால் துடிக்கிற, அழுக்கான திருச்சபையையே விரும்புகின்றேன். ஏனெனில் அது தன்னுடைய சொந்த பாதுகாப்பை மட்டும் பற்றிக் கொண்டு ஆரோக்கியமற்ற வகையில் முடங்கிக் கிடக்கிற திருச்சபையாக இல்லாமல் வெளியே வீதியில் எறியப்பட்ட திருச்சபையாக உள்ளது". "கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதவராய்த் தமக்காகவே செல்வம் சேர்ப்பவர் இத்தகையோரே." (லூக்கா 12:21)



" எனது நோயைப் பற்றி திருத்தந்தை எவ்வித பயமும் கொள்ளவில்லை. எதுவும் பேசாமலே அவர் என்னை அரவணைத்தார். நானோ வெடவெடத்துப் போனேன். மாபெரும் அரவணைப்பை உணர்ந்தேன்".

## 4, தீர்ப்பிடுபவர் அல்ல (யோவான் 4: 4–34)

"பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள்: அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்" என இயேசு மத்தேயு நற்செய்தியில் கூறுகின்றார். (மத். 7:1) "தீர்ப்பிட நான் யார்?" என்று பிரேசிலின் ரியோ டி ஜனேய்ரோவில் (Rio de Janeiro) நடந்த இவரது முதல் உலக இளைஞர் தின நிகழ்வுகளின் பின்னர் விமானத்தில் நடந்த ஒரு முறைசாரா செவ்வியில் ஓரினச்சேர்க்கை பற்றி ஒரு பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குறிப்பிட்டார். இந்த அறிக்கையின் மூலம் கேள்வியில் உள்ளடங்கியிருந்த நச்சுப்பற்கள் உடைக்கப்பட்டது என்றாலும், திருத்தந்தையின் வார்த்தைகள் இது போன்ற விடயங்களில் அறிக்கைகள் வெளியிடும் பத்திரிகையாளர்களை இலக்காகக் கொண்டிருந்தன. "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு." (யோவான் 4:34)

## 5, மக்களைச் சென்றடைதல் (மாற்கு 1: 40–43)

திருத்தந்தை பிரான்சிஸ் என்ற பெயரானது "மக்களின் திருத்தந்தை" என்ற கருத்தில் மொழிபெயற்கப் பட்டுள்ளது. ஏனெனில் தனக்கு வரும் மக்களின் கடிதங்களுக்குப் பதிலளிக்க தானே தொலை பேசியில் அழைப்புக்களை மேற்கொள்வார். அவரை சந்திக்க ஒவ்வொரு வாரமும் புனித பேதுரு சதுக்கத்தில் ஒன்று கூடும் ஆயிரக்கணக்கான அடியார்களைச் சந்தித்து வாழ்த்துக் கூற ஆவலாயிருப்பார். அவர் அவர்களைச் சென்றடைந்து அவர்களைத் தொட்டு, அவரை தொட, அவரது ஆசி பெற்றுக் கொள்ள, அல்லது அவரிடம் உதவி கேட்க வாய்ப்பு கொடுப்பார். தனது மந்தையின் பிரச்சனைகள், கவலைகள் மட்டில் இவர் காட்டும் இந்த உண்மையான அனுதாபமும், அக்கறையும், ஏழைகள், தொழுநோயாளிகள், பார்வையற்றவர்கள், நோயுற்றவர்கள், விதவைகள் ஆகியோரைத் தேடிச் சென்ற இயேசுக்கிறிஸ்துவின் செயல்களுடன் ஒப்பிடக்கூடியவையே. "இயேசு அவர்மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக என்றார்." (மாற்கு 1:41)

## 7, நம்பிக்கையுடையோர் மற்றும் நம்பிக்கையற்றோர் (யோவான் 20:29)

"நம்பிக்கையற்றோர் விண்ணகம் செல்லும் சாத்தியமுள்ளதா?" என்ற வினாவை, தன்னை ஒரு நாத்திகர் என்று கூறிக்கொள்ளும் La Repubblica என்ற இத்தாலிய நாளேட்டின் நிறுவுனர் Eugenio Scalfari அவர்கள் தொடுத்தார். அதற்குப் பதிலளித்த திருத்தந்தை அவர்கள் "கடவுள் நம்பிக்கை கொள்ளாதவர்களையும், நம்பிக்கையைத் தேடாதவர்களையும் மன்னிக்கிறார். ஓர் உண்மையான மற்றும் மனந்திருந்திய இதயத்துடன் கடவுளை நாடிச் சென்றால் அவரது இரக்கம் எல்லைகள் அற்றது. இங்கே பிரச்சினை எதுவென்றால் கடவுளை நம்பாதோர் தமது மனச்சான்றிற்கு அமைந்து நடக்கவேண்டும்... மனச்சான்றிற்கு செவிமடுத்து, அதன்படி ஒழுகுதல் என்பது நன்மை தீமை பற்றி ஒருவரது மனத்தை உருவாக்கிக் கொள்ளுதல் ஆகும். "காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்". (யோவான் 20:29)

## 8, பரிவிரக்கமுள்ள தந்தை (2கொரிந்தியர் 1: 4–5)

அண்மையில் வத்திக்கானுக்கு தனது அத்தையுடன் வந்திருந்த கடுமையாக உருக்குலைந்த மனிதர் ஒருவரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முத்தமிடும் புகைப்படங்கள் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளாயின. திருத்தந்தை அம்மனிதரை கட்டி அணைத்து முத்தமிட்டமையானது அவரைச் சூழ்ந்திருந்தோருக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்தது. அம் மனிதரின் பெயர் Vinicio Riva. அவர் ஓர் இத்தாலியர். தான் சாதாரணமாகவே மருட்சிப்பார்வை, அதிர்ச்சி, பயம் உடையவர் என்றும், ஆனால் ஆரம்பத்தில் திருத்தந்தை எவ்வித தயக்கமும் இல்லாது தன்னை அணுகியது தனக்குள் சிறிது குழப்பத்தை ஏற்படுத்தியது என்று கூறினார். "எனது நோயைப் பற்றி திருத்தந்தை எவ்வித பயமும் கொள்ளவில்லை. எதுவும் பேசாமலே அவர் என்னை அரவணைத்தார். நானோ வெடவெடத்துப் போனேன். மாபெரும் அரவணைப்பை உணர்ந்தேன்". "...அவர் வழியாக நாம் மிகுதியான ஆறுதலும் பெறுகிறோம்". (2 கொரி. 1:5)...

தொடர்ச்சி 15ம் பக்கம்.




# தொட்டார் குணமடைந்தேன்



## திருத்தந்தையால் தொடப்பட்டவரின் சாட்சியம்

திருத்தந்தையின் இலங்கை விஜயத்தின் போது திருத்தந்தை மன்னார் மருதமடு அன்னை மரியாள் ஆலயத்திற்கு வருகைத்தந்தது வரலாற்று மிக்கதொரு நிகழ்வாகும். மடு திருத்தலத்திற்கு காலடி எடுத்து வைத்த முதல் திருத்தந்தை என்ற பெருமைக்குரியவர் பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களே! 30 ஆண்டுகள் போர்களத்தில் நிம்மதியை தொலைத்து விட்டு, அமைதியை தேடி நின்ற மக்கள் அதிலிருந்து விடுபட்டு இன்று மகிழ்ச்சி ஆரவாரத்தோடு திரண்டிருந்த மக்களின் அவாவாக இருந்தது திருத்தந்தையை ஒரு முறையாவது பார்க்கவேண்டும். அவரைத் தொடவேண்டும், அவரது ஆசீரைப் பெற வேண்டும் என்பதேயாகும். அதற்காக அம்மக்கள் பல இக்கட்டுக்களையும் தாண்டி 2, 3 நாட்களுக்கு முன்னரே அன்னையின் அடியில் இருந்து செபத்திலும், தபத்திலும் ஈடுபட்டு திருத்தந்தையை வரவேற்கக் காத்திருந்தனர்.

திருத்தந்தையின் வருகைபோது அவரது முகத்தைப் பார்த்ததும் மக்கள் குரலொலி எழுப்பி தங்கள் அன்பையும், அளவில்லாத மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர். ஏனெனில் பல வருடங்களாக பல வடுக்களை தங்கள் உடலாலும், உள்ளத்தாலும் அனுபவித்துக் கொண்டிருந்த அவர்களின் வாழ்வில் ஒளியை கண்டதுபோல் உணர்ந்தனர். திருத்தந்தை அங்கு கூடியிருந்த அனைவரையும் ஆசீர்வதித்தார். விசேடமாக நோயாளிகள், அங்கவீனர்கள், மாற்றுத்திரனாளிகள், வயது முதிர்ந்தவர்கள் என எல்லோரையும் அருகில் சென்று தொட்டார் ஆசீர்வதித்தார். அவரின் தொடுதலைப் பெற்றவர்கள் பேறுபெற்றவர்களே. அவர்களின் ஒருவரான குணரட்னம் சபாரட்ணம் என்பவர் தான் குணமடைந்ததை ஊடகத்திடம் கூறியுள்ளார்.

நான் மருதமடு திருத்தலத்தில் பரிசுத்த திருத்தந்தையின் கரங்களைப் பிடித்துக் குலுக்கியது இறைவனைச் சந்தித்தது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. திருத்தந்தையின் தொடுதலானது பல ஆண்டுகளாக தான் அனுபவித்த வேதனைகள் அகற்றிவிட்டதெனவும், தான் குணமடைந்துவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

2006ம் ஆண்டில் எனது தம்பியைப் பார்ப்பதற்காக நான் வன்னிப் பகுதிக்குச் சென்றபோது போர் பகுதியில் சிக்கிக் கொண்டேன். அப்போது போரிலே எனது கால்கள் குண்டு வீச்சினால் கடுமையாகத் தாக்கப்பட்டது. அத்தோடு எனது குடுப்பத்தினரின் தொடர்பையும் இழந்துவிட்டேன். இப்போது நான் வன்னியில் கிளேறேசியன் சபையினர் நடாத்தும் மறுவாழ்வு மையத்தில் இருக்கின்றேன் என்றார். திருத்தந்தையின் தொடுகையால் நான் குணமடைந்தேன் என்று சாட்சியம் கூறியுள்ளார்.

# பரிசுத்த திருத்தந்தையின் இலங்கை விஜயத்தின் போது...

பரிசுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு எமது கொழும்பு உயர் மறைமாவட்டம் மற்றும் ஆயர் பேரவை ஒழுங்கு முறைகளை மேற்கொண்டிருந்தது. 5 இலட்சத்திற்கும் மேலான மக்களை எதிர்பார்த்திருந்த வேளையில் அவர்களுக்கு அடிப்படையான தேவைகளை சிரமமின்றி அவர்கள் பெறுவதற்கு பல முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. இக்குழுவிற்கு செயலாளராக அருட்தந்தை அன்தனி பர்னாந்து புள்ளே அடிகள் நியமிக்கப்பட்டார். நிகழ்ச்சி நிரல், போக்குவரத்து, திருவழிபாட்டு ஒழுங்கு முறைகள் மற்றும் திருத்தந்தையை வரவேற்றல் போன்ற நிகழ்வுகள் அருட்தந்தை தயா அடிகளாரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

திருத்தந்தையை பார்ப்பதற்கும் அருளார் யோசேவ்வாஸின் புனிதர் பட்ட நிகழ்வில் கலந்து கொள்ளவும் எதிர்பாராத அளவில் மக்கள் அலை அலையாக திரண்டிருந்தனர். மக்களை ஒழுங்கான ரீதியில் வழிநடத்தவும், கட்டுப்படுத்தவும் அருட்தந்தை ஸ்ரீநாத் அடிகளாரால் மேற்கொள்ளப்பட்டது. மற்றும் காலிமுகத்திடலில் மக்களை ஒழுங்கான ரீதியில் அமர்த்தவும், தண்ணீர், மின்சார வசதிகளை அருட்தந்தை பியந்த சில்வா மேற்கொண்டிருந்தார்.

அடுத்து முக்கிய கட்டமாக திரண்டிருந்த மக்களுக்கு திருப்பலி வேளையில் ஆண்டவரை கொடுப்பதற்கு பல ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சிற்றாலயங்களைச் செய்து அங்கு திவ்விய நற்கருணையை வைப்பதற்கு ஒழுங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்பாக 14ம் திகதி காலை புனித சூசையப்பர் கல்லூரியில் அருட்தந்தையர்கள், அருட்சகோதர, சகோதரிகள் அதிகாலை 4.00 மணிக்கு சென்று அங்கிருந்து அவர்கள் காலிமுகத்திடலுக்கு அழைத்து வரப்பட்டனர். திவ்விய நற்கருணையை பரிசுத்தமாக பெறுவதற்கு 8 அருட்சகோதரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இதற்கு பொறுப்பாக அருட்தந்தை சமிந்த வணிகசிங்க அடிகள் இருந்தார். மற்றும் காலிமுகத்திடலில் திருப்பலிக்கு, முன் இருக்கையில் நோயாளிகள், அங்கவீனர்கள், மாற்றுத்திரனாளிகள் டாலி வீதி மடத்திலிருந்து காலிமுகத்திடலுக்கு கொண்டு வரப்பட்டனர். இதற்கு பொறுப்பாக அருட்தந்தை நவின் ரொட்ரிக்கோ அவர்கள் நியமிக்கப்பட்டார்.

எதிர்பாராத விதமாக 7 இலட்சம் மக்கள் பங்கெடுத்து மகிழ்ந்தார்கள் என்றே கூறவேண்டும். போக்குவரத்து வசதிகள் எமது நாட்டின் அனைத்து மறைமாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டது. இதற்கான புகையிரத வண்டிகள், பஸ்வண்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டு மக்களின் வருகை எவ்வித பிரச்சினைகளுமின்றி வழிநடத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறாக எவ்வித சிரமமுமின்றி திருத்-தந்தையை மிக அருகாமையில் பார்த்து கொண்ட மக்கள் தங்கள் மகிழ்வினைத் தெரிவித்தனர்.

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை வருகையை மீளப்பார்த்தல்...



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எமது நாட்டிற்கு வரும் செய்தியை அறிந்தவுடன் எனதுள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. அந்த ஆனந்தத்தை வார்த்தைகளால் அளவிடமுடியாது. எமது நாடு இந்து சமுத்திரத்தின் முத்தென வர்ணிக்கப்படுகிறது. இச்சிறுதீபகத்தில் வாழும் நாம் பேறுபெற்றோர்

அந்நாட்களில் எமது நாட்டில் இருந்த சூழல் மிகவும் அமைதியற்று இருந்தது. தேர்தல் தை மாதம் 8ம் திகதி என்று அறிந்தவுடன் கத்தோலிக்கர் எமது மனநிலைகளில் திருத்தந்தையின் வருகையைப் பற்றி ஒரு குழுப்பநிலை ஏற்பட்டது எனலாம். அத்தோடு மார்கழி 8ம் திகதி மாற்றம் தேவையென இதற்கு முன்பிருந்த அமைச்சரவையில் இருந்து ஒரு குழுவொன்று வெளியே வந்து மும்முரமாக செயற்படும்போது மக்கள் பலர் மனதில் எழுந்த கேள்விதான் திருத்தந்தை வருவாரா? தேர்தல் முடிந்து நாடு அமைதி அடைந்தபின் வருவது நல்லதில்லையா? இவ்வாறு பற்பல கேள்விகள் எழும்போது, எமது பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குழுவாக செயற்படும் குருமார்களிடம், “திருத்தந்தையின் வருகை உறுதியா?” எனக் கேட்டபோதெல்லாம் கிடைத்த பதில்தான் “கட்டாயம் திருத்தந்தை வருவார்” என்பதுதான். இதில் நான் கண்டது என்னவெனில் இவ்வார்த்தையின் பின்னணியில் நிற்கும் எமது பேராயர் அவர்களை அவரது விசுவாசம் திருத்தந்தை பற்றி உறுதியாக இருந்தது. அவர் திருத்தந்தையின் வருகை பற்றி ஆண்டவரில் உறுதியான விசுவாசத்தில் இருந்தாரென்பது. இந்த விசுவாசத்தின் வார்த்தை “திருத்தந்தை உறுதியாக வருவார்” எமக்கும் தெம்பையும் உற்சாகத்தையும் தந்ததெனலாம். தை மாதம் 14ம் திகதி காலிமுகத்திடலில் ஒன்றுகூடிய சனத்தொகை அந்த விசுவாசத்தை வார்த்தையை மெய்யாக்கியது. நற்செய்தியில் வரும் புளிப்பு மா உவமையை நினைவுபடுத்தியது.

முதற்கண் நான் நன்றி கூறுவது எல்லாம் வல்ல இறைதந்தைக்கு, அதன்பின் முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகளாரை புனித நிலைக்கு உயர்த்துவதற்காக எமது தேசத்திற்கு வருகை தந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு. ஏனெனில் அன்னை தெரேசாவை புனிதர் நிலைக்கு உயர்த்தும் போது இந்தியர்கள் உரோமபுரி வத்திக்கானுக்கு சென்றார்கள். எம்மில் எத்தனை பேருக்கு வத்திக்கானுக்கு போக முடியும்.

இறைதந்தை திருத்தந்தையை எமது சிறிய தீபகத்திற்கு வரச் செய்ததினூடாக இலட்சக்கணக்கான மக்கள் அவ்விசேஷ திருப்பலியை காணச்செய்தார். திருத்தந்தையின் திருப்பலியில் பங்குகொள்ளவும், அவரைக் கண்டு களிக்கவும் வாய்ப்பளித்தார். தேவனுக்கு நன்றி. அடுத்தபடியாக இவ்வருகைக்காக அழைப்பு விடுத்த எமது அன்புக்குரிய பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். மருத மடுத்திருப்பதிக்கு வரும்படி அழைத்த மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்களுக்கும் நாம் நன்றி நவில கடமைப்பட்டுள்ளோம். ஆயர் மன்றத்தின் ஆயர்கள் அனைவரும் ஒருமனப்பட்டு திருத்தந்தையின் வருகைக்கு ஒத்துழைப்பு கொடுத்தமைக்காகவும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.

இச்செய்தியை அறிந்த நாள் தொடக்கம் முன்னின்று பெரும் அர்ப்பணத்துடன் உழைத்த அனைத்து குருக்களுக்கும் நன்றி. ஏனெனில் உங்களது அர்ப்பணத்தால்தான் இவ்வளவு ஒழுங்கமைப்பாக அனைத்தும் முடிந்தது. மற்றும் துறவற சகோதர சகோதரிகள், பொதுநிலையினர், அரச அதிகாரிகள், பொலிசார் உட்பட பல பாடசாலைகள், நிறுவனங்கள் ஆகியயோர் முழுமையான சிறப்பான ஒத்துழைப்பை தந்து திருத்தந்தையின் வருகையை சிறப்பித்தனர். அனைவருக்கும் நன்றி. முன்னாள் ஜனாதிபதிக்கும், புதிய ஜனாதிபதிக்கும் நன்றி. திருத்தந்தைக்கு ஒரு தேசத்தின் முதல்வர் கொடுக்க வேண்டிய அழைப்பை கொடுத்தமைக்காகவும், புதிய ஜனாதிபதி அதை முன்னெடுத்து சென்று திருத்தந்தையை வரவேற்பு தொடக்கம் கொடுத்த அனைத்து ஒத்துழைப்பிற்காகவும் இறைதந்தைக்கு நன்றி. இந்த எண்ணக்கருவை எமது அதியுயர் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகைக்கும் எமது நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். எமக்கு கிடைத்த ஆசீர்வாதத்திற்கு எவ்விதத்திலும் நன்றி கூறுவது ஈர்பாகாது

மேரி மார்த்தா, சுபெந்தி சகோதரி




## தவக்காலத்தின் 2வது ஞாயிறு 01.03.2015

**வாசக விளக்கம்:** இன்று நாம் ஆண்டவரின் உருமாற்ற விழாவைக் கொண்டாடுகின்றோம். இயேசுவோடு மூன்று ஆண்டுகள் வாழ்ந்த சீடர்களில் மூவருக்கு மட்டுமே கிடைத்த வியப்புக்குரிய அனுபவம். ஆனால் இன்று நம் அனைவருக்குமே இந்த அனுபவத்தைப் பெற ஒரு வாய்ப்பு உள்ளது என்ற நம்பிக்கையை தருகின்றது. இன்றைய முதல் வாசகத்தில் விசுவாசத்தின் தந்தை என் அழைக்கப்படும் ஆபிரகாம், மேலும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்படுகின்றார். கடவுளின் கட்டளையை நிறைவேற்றுவதில் எத்தகையை துன்பம் வந்தாலும் உறுதியாக இருந்தார் என விளக்குகின்றது. “கடவுள் நமக்காக” என்ற கருத்தைத் தரும் இரண்டாவது வாசகம் கிறிஸ்து இயேசுவில் நாம் நம்பிக்கை கொண்டிருந்தால் எந்த தீய சக்தியோ, பயமோ, துன்பமோ தொல்லையோ நம்மை அணுகாது என்று கூறுகின்றது. நற்செய்தியில் நாம் காணும் இயேசுவின் உருமாற்றம் மனமாற்றம் பெறத் தயாராக இருக்கும் அனைவருமே இயேசுவின் மகிமையிலும் பங்குபெறுவர் எனக் கூறுகிறது. மனமாற்றம் என்பது பாவங்களிலிருந்து விடுதலை பெறுவது மட்டுமல்ல, பிறருக்காக துன்பப்படவும் பிறரின் வாழ்விற்காக, வளர்ச்சிக்காக, தியாகங்கள் புரியவும் வேண்டும் என்பதாகும். இதற்கு வேண்டிய நல்மனதை இறைவனிடம் கேட்டுப்பெறுவோமாக.

**முதல் வாசகம் :** தொ.நூல் 22:1-2, 9-13, 15-18
நம் முதுபெரும் தந்தை ஆபிரகாமின் பலி

**பதிலுரைப்பாடல் :** உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.

**இரண்டாம் வாசகம் :** உரோ 8:31-34
கடவுள் தம் சொந்த மகனென்றும் பாராமல் அவரை நமக்காக ஒப்புவித்தார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
ஒளிரும் மேகத்தினின்று தந்தையின் குரலொலி கேட்டது “என் அன்பார்ந்த மகன் இவரே. இவருக்கு செவிசாயுங்கள்”

**நற்செய்தி :** மாற் 9:2-10

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவார்த்தைமீது இறைமக்கள் விசுவாசம் கொள்ள தன் வாழ்வாலும், போதனையாலும் வழிகாட்டும் தூய திருச்சபையையும், அதன் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் தம் பணிவாழ்வில் சிறந்தோங்க தேவையான உடல், உள, ஆன்ம நலன்களை தந்தருள வேண்டுமென்று...




மாற்றம் ஒன்றே மாறாத தன்மையுள்ளது என்பதை உணர்ந்து நாட்டின் அரசியல், சமூக, சமயத் தலைவர்கள் அனைவரும் நாட்டிற்கு தேவையான நல்ல மாற்றங்களை உருவாக்கி மக்களை வழிநடத்தவும், அர்ப்பணிப்புடன் பணியாற்றி அனைவருக்கும் நன்மை செய்யவும், தேவையான மனமாற்றத்தை தந்தருள வேண்டுமென்று...

தூய ஆவியானவர் நம்மிலே செயல்பட்டு நம்மை இயேசுவைப்போல உருமாற்றுகிறார், நம்முடைய துன்பங்களில் நம்மோடு இருந்து நமக்கு வல்லமை தருகிறார் என்பதை உணர்ந்தவர்களாக கல்வாரிப் பாதையில் வந்த சீமோனைப்போல் பிறரின் துன்பத்தில் பங்குகொள்ளவும், மனமாற்றம் பெற்றவர்களாய் இயேசுவின் மகிமையில் பங்குகொள்ளவும் வரமருள வேண்டுமென்று...

## தவக்காலத்தின் 3வது ஞாயிறு 08.03.2015

**வாசக விளக்கம்:** தவக்காலத்தில் மூன்றாம் ஞாயிறை நோக்கி தடம் பதித்துக்கொண்டிருக்கும் நமக்கு இன்றைய இறைவார்த்தைகள் அனைத்தும் ஒரு புரட்சிகரமான கருத்தையும், தவக்காலத்தில் நாம் செய்ய வேண்டிய முக்கிய காரியத்தையும் கூறுகின்றன. இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு எருசலேம் ஆலயத்தை தூய்மைப்படுத்துகின்றார். ஆலயம் என்பது இறைவன் வாழும் இல்லம். இது இறைவனின் அன்பையும், அருளையும், மன்னிப்பையும், மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் தரவல்லது. நம்முடைய எண்ணம், செயல், சொல் மற்றும் வாழ்க்கையும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் நாம் அனைவரும் பரிசுத்த ஆவியின் ஆலயம் கடவுள் வாழும் இல்லமாக திகழும் நாம் எப்பொழுதும் தூய்மையாக இருக்க வேண்டும் இன்றைய முதல் வாசகம் நமக்கு பத்து கட்டளைகளை தருகின்றது. இவை நம்மைப் பயமுறுத்தவல்ல மாறாக நம்மை பாவ வாழ்வில் இருந்து ஆன்மீக இருளில் இருந்து விடுவிக்கவே. நாம் தூய்மையாக வாழ இறைவனின் அருளையும் கொடையையும் தருகின்ற இத்தவக்காலத்தை நல்லமுறையில் பயன்படுத்தி வாழ இறையருளை வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** வி.ப 20:1-17
திருச்சட்டம் வழியாக அளிக்கப் பெற்றது.

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரே நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் உள்ளன.

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 1:22-25
சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே பறைசாற்றுகிறோம் அவரது சிலுவை யூதருக்குத் தடைக்கல், அழைக்கப்பட்டவருக்கோ கடவுளின் ஞானம்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.

**நற்செய்தி :** யோவான் 2:13-25

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவன் வாழும் இல்லங்களாக இறைமக்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்தும் பணியில் அயராது உழைக்கும் திருச்சபையையும், திருப்பீடத்தினரையும் ஆசீர்வதித்து வழி நடத்தவும். இவர்கள் அனைவரும் ஆன்மாக்களை கரை சேர்க்கும் பணியில் அயராது உழைக்கவும் தேவையான அருட்கொடைகளைப் பொழிந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டை வழிநடத்தும் தலைவர்களும், தலைமைப் பீடங்களை அலங்கரிப்போரும், சுயநலம் துறந்து பொதுநலம் பேணவும், மக்களின் நலன் கருதி நீதி, நேர்மை, உண்மை வழி நின்று பணியாற்றவும், இன, மத, மொழி வேறுபாடுகளற்ற சமுதாயத்தை உருவாக்கவும் தேவையான வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று.

நாம் அனைவரும் பரிசுத்த ஆவி குடிகொள்ளும் ஆலயம் என்ற நிலையில் நம்முடைய எண்ணம் செயல் மற்றும் வாழ்க்கை யாவும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்தவர்களாக, புறத்தூய்மையை விட அகத்தூய்மையே மேலானது என்பதற்கேற்ப உண்மையான மாற்றம் பெற்று வாழத் தேவையான அருட்கொடைகளை பொழிந்தருள வேண்டுமென்று....

# இலங்கையின் முதலாவது புனிதராக யோசேவ்வாஸ் உயர்த்தப்பட்டார்

காலி முகத்திடலில் இலட்சக்கணக்கான மக்கள் நிரம்பியிருந்தனர். மக்கள் இரண்டு நிகழ்வுக்காக இங்கு எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

1. திருத்தந்தையின் வருகை..
2. புனித யோசேவ்வாஸ் முனியோரின் புனிதப்பட்ட நிகழ்வு

திருத்தந்தையின் இலங்கைக்கான விஜயத்தின் முக்கிய விடயமாகச் புனித யோசேவ்வாஸ் அடிகளார் புனிதர் நிலைக்கு உயர்த்தும் வைபவம் அமைந்திருந்தது

யோசேவ்வாஸ் அடிகளாரை புனிதராக பிரகடனம் செய்தவற்கான ஆயத்தங்கள் கிட்டத்தட்ட 300 வருடக் காலமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. இறைவனின் திட்டத்தின்படி இவ்வருடமே பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களால் புனிதராக உயர்த்தப்பட்டார்.

கடந்த மாதம் 14ஆம் திகதி புதன்கிழமை காலை 8.15 மணியளவில் காலி முத்திடலில் நடைபெற்ற திறந்தவெளி சிறப்புத் திருப்பலியிலே யோசேவ்வாஸ் அடிகள் புனிதராக உயர்த்தப்பட்டார். இந்நிகழ்வு எம் நாட்டிற்கும் எமது திருச்சபைக்கும் பெருமை சேர்க்கும் ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது. 1651இல் சித்திரை 21ஆம் திகதி இந்தியாவின் கோவாவில் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார் யோசேவ்வாஸ்.

இவர் இலங்கையின் ஒல்லாந்தர் ஆட்சிகாலத்தில் இலங்கை கத்தோலிக்க மக்கள் பல இன்னல்களையும், கலாபனைகளையும் அனுபவித்த காலம் கத்தோலிக்கமே அழிந்து போகும் நிலையில் இருந்தது. யோசேவ்வாஸ் அடிகளாரின் வருகையால் அழிந்து போகாமல் மீட்கப்பட்டது. அவரது அயராத கடின மறைப்பணி காரணமாகவும் மக்கள் மத்தியில் காட்டிய பரிவினாலும், இரக்கத்தினாலும் கத்தோலிக்கம் தீய சக்திகளின் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது.

அதாவது புனித யோசேவ்வாஸ் இறைவன் பால் கொண்ட பிளவுப்படாத அன்பு அயலவர்களை நோக்கிய அன்பிற்கு அவரை திறந்துவிட்டது. தேவையில் உள்ள எல்லோருக்கும், அவர்கள் யாராக இருந்தாலும் எவ்விடத்தவராக இருந்தாலும், அவர் தேடிச் சென்று பணி புரிந்தார். இவ்வாறான மதிப்பீகளே அவரை புனிதராக உயர்த்த வைத்தது. மக்களுக்கு விசுவாசத்தைக் கொணர்ந்தது. பல்வேறு சவால்கள் மத்தியில் அவர் கொண்டிருந்த உறுதியும், இறை விசுவாசமும் இறைமக்களை கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியாய் இருக்க வழிவகுத்துக் கொடுத்தது. அத்தோடு அதைக் கட்டிக்காக்கவும் வளர்க்கவும் உதவியது எனலாம்.

இவரது பணி வாழ்வையும் புனிதத்துவத்தையும் அறிந்து கொண்ட திருச்சபை 1995ஆம் ஆண்டு எமது முன்னாள் திருத்தந்தை பரிசுத்த 2ஆம் ஜோன் போல் அவர்கள் 1995 இலங்கைக்கு வந்திருந்தபோது யோசேவ்வாஸ் அடிகளாரை அருளாளராக உயர்த்தப்பட்டார். அதன் பின் எமது கத்தோலிக்க விசுவாசிகளின் விசுவாசத்தினாலும், மன்றாட்டினாலும், செபத்தினாலும் 20 வருடங்களுக்குப் பிறகு எனது திருத்தந்தை பிரான்சஸ் அவாகள் யோசேவ்வாஸ் அடிகளார் இலங்கையின் முதல் புனிதராக உயர்த்தினார். அன்றைய திருப்பலியில் திருத்தந்தையின் உரையில்...

திருச்சபைத் தலைமைப் பீடங்களிலிருந்து வந்த தடைகள், அவருக்கு துணையாக வந்தவர்களிமிருந்து போதிய ஒத்துழைப்பில்லாமை, இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட தடைகள் நோய் நொடிகளால் ஏற்பட்ட தடைகள், ஒல்லாந்த ஆலுவலர், ஆளுநர்களால் ஏற்பட்ட முட்டுக் கட்டைகள், கலாபனைகள் கத்தோலிக்க மதவிரோதிகளால் ஏற்பட்ட சூழ்சிகள், போன்றவற்றால் ஏற்பட்ட தடைகள் பின்னடைவுகளாக தென்பட்டாலும் இறைபராமரிப்பால் வாஸ் அடிகளாரது பணிவாழ்வைப் பொறுத்தளவில் அவரது அடுத்தக்கட்டப்பணி வாழ்வுக்குத் தேவையான தயாரிப்பாகவும், உந்து சக்தியாகவும் இருந்தமையே காணக் கூடியதாயிருக்கின்றது.

« » தொடர்ச்சி 15ம் பக்கம் « »



## திருத்தந்தையின் கொடிக்கு தகுந்த மதிப்பளிப்போம்.



திருத்தந்தை இந்நாட்டிற்கு வருகை தரும்போது நாடெங்கும் வர்ண விளக்குகளும் வர்ண தோரணங்களும் விதம் விதமான சோடினைகளால் நாடெங்கும் ஜொலித்தது. விசேடமாக கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு பொரளை ஆயர் இல்லம் வரை, காலிமுகத்திடல் மற்றும் மடுத்தேவா-லயத்திற்குச் செல்லும் பாதை, அடுத்த நாள் போலவளானை போன்ற இடங்கள் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இன, மத, குல பேதமின்றி இரண்டு வாரங்களுக்கு முன்பிருந்தே அரச சார்பாகவும், தனிப்பட்ட ரீதியாகவும், கத்தோலிக்க ஆயர்கள் சார்பாகவும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் நாம் நம் நாட்டின் கொடிக்கும், வத்திக்கான் கொடிக்கும், திருத்தந்தையின் கொடிக்கும் நாம் கௌரவத்தையும், மரியாதையையும் செலுத்த வேண்டும்.

இம்மூன்று கொடிகளும் தாய்நாட்டையும், நமது ஆன்மீகத் தலைவரையும், திருச்சபையையும் குறித்து நிற்கின்றன. எனவே நாம் அவற்றுக்கு மதிப்பளித்து காக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். எனவே நாட்டையும், சமயத்தையும் திருச்சபையையும் மதியுங்கள். கௌரவப்படுத்துங்கள், தலைசாயுங்கள்.

## திருத்தந்தையின் வருகை இலங்கைக்கு பெருமை

இந்நாட்களில் உலக அளவில் இலங்கையைப் பற்றி நேர்மையாக, பெருமையாக பேசப்படுவது இருவித செயற்பாட்டுக்காக

1. நன்முறையில் நடந்த ஜனாதிபதி தேர்தல்.
2. திருத்தந்தையின் வருகை

இரு காவியங்களும் மக்கள் மனங்களில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளதை மறுக்க இலயாது.

சாதி, மத, மொழி பேதமின்றி எல்லோரும் ஒன்று சேர்ந்து கூடிய செயல் மனித குல மகத்துவ தன்மையை சிறப்பிக்கின்றது. அதிலும் பலவித இழப்பு, காயங்கள், வேதனைகள், குற்ற உணர்வுகள் இருந்த இடத்தில் குணப்படுத்தும் வகையில் திருத்தந்தையின் வருகை இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

அவரது வருகை பல உள்ளங்களில் பதிந்துள்ளது போல தொடர்ந்து இலங்-கைக்கு நல்ல பதிவுகள் ஏற்பட்டு மனித-நேயம் காத்து, இயேசு விரும்பிய சமத்துவ, சமாதான சமுதாயம் வளர்வதை காண்பதே மிகச் சிறந்த நிறைவாகும்.

**அருட்தந்தை. லூயிஸ், கார்மல்சபை**

## புனித யோசேவ்வாஸ் அடிகளார் முதன் முதலில் கால் பதித்த மன்னார் சவுத்பாரில் கொங்கணி மொழியில் திருப்பலியும், முதல் திருவிழாவும்.

கடந்த தை மாதம் 14ம் திகதி காலை 8.30மணித் சிறப்புத் திருப்பலியில் திருத்தந்தை பரிசுத்த பிரான்சிஸ் அவர்களால் அருளாளர் யோசேவ்வாஸ் அடிகள் புனிதராக உயர்த்தப்பட்டார். இத்திருப்பலியில் கலந்து கொள்வதற்காக இந்தியாவின் கோவா மாநிலத்தில் இருந்து வருகை தந்த ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் மற்றும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இறைமக்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

ரொபின் றொட்றிக்கோ அடிகளின் தலைமையில் வருகை தந்த தொண்ணூறு பேர் புனித யோசேவ்வாஸ் முதன் முதல் கால்பதித்த இடமாகிய மன்னார் சவுத்பார் பகுதிக்குச் சென்று அவ்விடத்தில் தேசிய யோசேவ்வாஸ் குழுவினரால் ஞாபக சின்னமாக 18 அடி உயரத்தில் கோபுரம் எழுப்பி அதன் உச்சியில் ஒரற்றேரியன் சிலுவை வைக்கப்பட்டிருந்தது. அந்த ஞாபகச் சின்னத்தை மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் தை 15ம் திகதி மாலை 4.00 மணிக்கு ஆசீர்வதித்து திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து தமிழ் மொழியிலும், கொங்கணி மொழியிலும் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது, அதை தொடர்ந்து தை 16ம் திகதி காலை 7.30 மணிக்கு புனித யோசேவ்வாஸ் அடிகளாருடைய முதல் திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட குரு முதல்வரால் தூய யுவானியார் கோவிலப்பிட்டி மேட்டில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலியில் 200க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து சிறப்பித்து புனிதரின் பரிந்துரையை வேண்டி செபித்தனர்.



## திருச்சபையின் தலைவரே

விண்ணில் தோன்றிய
எரிகல்லாய்
மக்கள் மனதில்
கிறிஸ்து எனும்
ஒளியை ஏற்ற வந்தவரே
ஏழைகளின் மனதில்
கிறிஸ்து அவரைப்
பரிணாமித்து
இலங்கை வந்து தரிசித்த
திருச்சபையின்
266வது தலைவரே
உம்மை
இலங்கை மக்கள்
என்றும் மறவாது
உமக்காக
என்றும் செபிப்போம்
என வாழ்த்துக்
கூறுகின்றோம்.



## அன்பில் நிலைத்திருங்கள்

அன்பில் நிலைத்திருங்கள் என்றார் போப் பப்பா,

ஆணவத்தாலும், வைராக்கியத்தாலும்
அழித்திடாதீர்கள் அன்பை,

இவ்வுலகில் அனைத்தும், அனைவரும் ஏங்குகின்றனர்
அன்புக்காக,

ஈந்திடுங்கள் அன்பை இச்சை தவிர்த்து
தூய்மையாக,

உன்னைப் போன்று அன்பு செய் உன் அயலானை.

ஊமையாய் இருந்திடாதே, அன்புக்கு அறைகூவல் விடு,

என்னை அன்பு செய் என நாள்தோறும் வேண்டிடு இறைவனிடம்
இதுவே நிலையானது,

ஏனடா மானிடா நீயும் செல்கின்றாய்
இறைபடைப்பை அன்பு செய்யாத மானிடப் பிறவியிடம்,

ஐயகோ! நீயும் இழந்திட்டாய் வாழ்வுதனை "அன்பு" என்ற
வார்த்தையை போலியாய் போர்த்தியவரிடம்

ஒருநாளும் துன்புறுத்தாது உண்மை அன்பு பிறரின் மனதை

ஓருடலால் நாமிணைவோம் "போப் பப்பா" கூறியபடி தூய
அன்பில் நிலைத்திருப்போம்

ஔடதமாய் காட்டிடுவோம் "அன்பை" பிறர் உளமதை மலர்
சோலையாக்கிட,

**செய்வோம் செய்வோம் அன்பு**
**செய்த அன்பில் என்றும் நிலைப்போம் புவிதனில்**

.................................

**ஆக்கம் : செல்வி. பிளீசியா பெர்னான்டோ**
**[புனித பேதுரு கல்லூரி ஆசிரியை]**

## திருத்தந்தை அவர்க

திருத்தந்தை அவர்களின் இலங்கை விஜயத்தின் போது பல்வேறு விதமான கலாச்சார நிகழ்வுகளும் ஆன்மீகம் சம்பந்தமாக பல நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அந்த வகையில் இன்னுமொரு முக்கிய நிகழ்வாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் நினைவின் சின்னமாக அவரது பெயரில் கலாச்சார மண்டபமொன்று திறந்து வைப்பதற்காக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். அந்த வகையில் அவரை வரவேற்கும் முகமாக எமது கர்தினால் அதிமேதகு மெல்கம் ரஞ்சித் அவர்களும், அருட்தந்தை குயின்டஸ் பெர்ணான்டோ அவர்களும் மற்றும் மேலும் சில அருட்தந்தை அவர்களும் திருத்தந்தையை வரவேற்றனர். மற்றும் கம்பஹா திருச்சிலுவை கன்னியர் மடத்தை சேர்ந்த மாணவிகள் மணம் வீசும் மல்லிகை மலர்களிலான பூச்சென்றை வழங்கி திருத்தந்தையை அன்புடன் வரவேற்றனர்.

பின் திருத்தந்தை அவர்கள் ஆலயத்திற்குள் சென்று ஒரு சிறு செபவழிபாடொன்றையும் முக்கியமாக இந்த வைபவத்திற்காக பல்வேறு வகையில் உதவி செய்த அனைவருக்காகவும் செபங்களையும் ஆசீர்வாதங்களையும் வழங்கினார். மேலும் ஒரு குழுவினர் 'Soul Sounds" பாடலை பாடி இறைவனுக்கு நன்றிகளையும் புகழையும் பாடி வாழ்த்தினர்.

திருத்தந்தை அவர்கள் ஆலயத்-திற்குள் இருந்த அருட்தந்தையர்கள்,

# வாழ்க பரிசுத்த தந்தையே



திருச்சபையின் தலைவனாய்
திருமறையின் தூதுவனாய்
பார்போற்றும் பக்தனாய்
பாமர மக்களின் தந்தையாய்
மக்கள் உள்ளத்தை கவர்ந்தீரே
மன்னவன் இயேசுவை பின்பற்றும்
எம் பரிசுத்த தந்தையே
எம் பாவால் எம்மை வாழ்த்துகின்றோம்
**வாழ்கவே உம் பணி**
**வளர்கவே உம் புனித பணியே**

எளிமையில் சிறந்தவனாய்,
எம் உள்ளம் ஈர்த்தவனாய்,
பாரபட்சம் பார்க்காத பக்திமானே,
பரந்த உன் உள்ளம் படர்ந்து ஏழை எம் மனதில்
தாழ்ச்சியின் இருப்பிடமாய் - எம்
தாயகம் நோக்கி வந்தீரே
தாயைப் போல பாசம் கொண்டவரே
தந்தையே தாள் பணிந்தோம் - உம்
தாள்கள் நாம்
**வாழ்கவே உம் பணி**
**வளர்கவே உம் புனித பணி**

மதங்களின் மனதைக் கவர்ந்தவரே
மாமன்னன் இயேசுவை அணிந்தவரே
ஈழ எம் நாட்டிற்கு ஈகை புரிந்தவரே
ஈந்தோம் எம் வாழ்த்தை
தாழ்ந்தோம் உம் பாதம்
கருணையின் முன்மாதிரிகையாய்
கர்த்தர் இயேசுவை பின்பற்றும்
தேடி வந்தீரே எம் தந்தையே
தேவைதனை தேசத்திற்கு அளித்தவரே,
மாந்தர் நாம் மகிழ்க்கின்றோம்
மாசுமறுவற்றவரே,
**வாழ்த்துகின்றோம் தந்தையே**
**நீர்வாழி நீடூழியவே**

பாரெல்லாம் போற்றப்படும் - எம்
பரிசுத்த தந்தையே - உம்
பக்தர்கள் நாம் வேண்டினோம்
பாதுகாப்பு அளித்திடவே
பரிசுத்த எம் தந்தையே - உம்
பாதம் தொட்ட பூமி புண்ணிய புனித பூமி
பாமரன் இயேசுவின் பணிபுரிந்திட
பற்பல தேசம் கடந்து வந்தீர்
**எம் பரிசுத்த தந்தையே**

மன்னவன் இயேசுவிற்காய் - தன்
சேவையை ஈந்தவரே
மனித மாண்பை மதித்திடவே
மனித மனங்களில் நிறைந்தவரே
களங்கமில்லா உள்ளம் கொண்டவரே
கருணையின் இருப்பிடமாய் உதித்தவரே
மக்களின் மகிழ்ச்சியாய் திகழ்ந்தவரே - எம்
மனங்களின் நிறைந்திடும் மாவள்ளமே
**வாழ்த்துகின்றோம் எம் தந்தையே**
**வந்தனை புரிந்தோம் எம் தந்தையே**

எம் பிரான் இயேசுவிடம் எந்நாளும்
உமக்காய் வேண்டிடுவோம் - நீர்
ஏற்ற பணியை தொடர்ந்தாற்றிடவே
எங்கள் வேண்டுதல்கள் எந்நாளும் உமக்காய்
தொடர்ந்து வேண்டுவோம் - உம்
தொண்டாற்றும் பணிக்காய்
நன்றிகள் பல ஈந்தோம் - எம் தந்தையே
நாளும் நீர் நீடூழி வாழவே
நாமெல்லோரும் ஒன்றிணைந்தோம் - நாதன்
இயேசுவிடம் வேண்டிடவே தந்தையே நீர்
நீடூழி வாழ்கவே வாழ்த்தினோம் உம்மை
**வாழ்க எம் தந்தையே**
**வளர்க உம் அன்புப் பணி**
**வாழ்த்துகின்றோம்**
**வாழ்த்துகின்றோம்**
**நீடூழி நீர் வாழ்கவே**

அருட். சகோ டெளறோஸ். அ.கா

# வளர்க உம் புனித பணியே!

## களின் போலவலான விஜயம்...



அருட்சகோதரிகள் மற்றும் ஆலயத்திற்குள் கூடியிருந்த மக்களையும் சந்தித்து உரையாடினார். விசேட விதமாக அருட்தந்தை விட்டோ பெர்னியோலோ அவர்களையும் சந்தித்து உரையாடினார். மற்றும் பிட்டிபான கிரேன்ட் ஸ்டிரீட், துவா பங்கைச் சேர்ந்த கடற்தொழில் செய்யும் மீனவர்களின் குடும்பத்தவர்களையும் பார்த்து உரையாடினார்.

பின் ஆலயத்திற்குளிலிருந்து திருத்தந்தை அவர்கள் வெளியே வந்ததும் கர்தினால் ஆண்டகை திருத்தந்தை அவர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார். பின் திருத்தந்தையும், கர்தினால், அருட்தந்தையர்கள் இவ்மண்டபத்தை அமைப்பதற்காக உதவிசெய்த அனைவரையும் உள்ளடக்கி நினைவுச்சின்னமாக புகைப்படம் எடுக்கப்பட்டது. பின் திருத்தந்தை அவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு பயணமானார்.

# திருத்தந்தையின் காலிமுகத் திடல் நிகழ்வு ஒருமைப்பாட்டு சின்னமாகும்.

அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரை புனிதர் நிலைக்கு உயர்த்தும் நிகழ்வே திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகை 2015ம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்ததற்கான முக்கிய காரணமாகும். தை மாதம் 14ந் திகதி காலிமுகத்திடலில் நடைபெற்ற விசேட திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் ஆண்டகையினால் இலங்கையின் அப்போஸ்தலரான அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். இதனாலேயே 2015ம் ஆண்டு அனைவரின் கவனமும் திருத்தந்தை இந்நாட்டில் ஆற்றிய திருப்பலியின் பால் திரும்பியிருந்தது. திருத்தந்தை ஆற்றும் ஒரே திருப்பலி என்பதால் மக்கள் பலர் இதில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. அதற்கான பல ஆயத்தங்களைச் செய்யவேண்டியிருந்தது. அனைத்து நிகழ்வுகளுக்கும் தனித்தனியான ஒழுங்குகள் நடைபெற்றன. இதற்கு முன் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் கத்தோலிக்க மக்கள் மட்டுமே கலந்து கொண்டனர். ஆனால் திருத்தந்தையின் விருப்பத்திற்கிணங்க அனைத்து மத மக்களும் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அனைத்து சமய மக்களும் திருத்தந்தையை அன்புடனும், ஆவலுடனும் வரவேற்றனர். அவரது அனைத்து நிகழ்வுகளிலும் ஆரவாரத்துடன் கரகோஷம் எழுப்பி மகிழ்வுடன் திருத்தந்தையின் வதனம் காண ஒன்று கூடி நின்றனர். இந்நிகழ்வில் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்து அனைத்து நிகழ்வையும் சிறப்பாக நிறைவேற்ற உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**ஆக்கம் : செல்வி. பிளீசியா பெர்னான்டோ (புனித பேதுரு கல்லூரி ஆசிரியை)**




## தவக்கால திருயாத்திரை

பனிமய மாதா சங்கம் 30வது தடவையாக தேவத்தையில் நடாத்தும் தவக்கால திருயாத்திரை எதிர்வரும் 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை நடை-பெறும்.

**மேலதிக விபரங்களுக்கு**
**திரு. டெரன்ஸ் பீரிஸ் 0773770550**
**திரு. ஜெயக்குமார் பர்னாந்து 0777181275**

# குடும்ப கருத்தரங்கு

குடும்பம் மற்றும் அர்ப்பண வாழ்வு ஆண்டின், தவக்கால ஆன்மீக "அர்ப்பணிக்கப்பட்ட இறை குடும்ப உறவு" பற்றிய கருத்தரங்கு.

பெற்றோர் தம் பிள்ளைகளுடன் குடும்பமாக கலந்துகொள்ளலாம்.

**இடம்** : புனித லூசியாள் பேராலயம், கொட்டாஞ்சேனை
**திகதி** : 05.03.2015 வியாழக்கிழமை
**நேரம்** : காலை 8.30 மணி தொடக்கம் 12 மணிவரை

**கருத்தரங்கினை நடத்துபவர் :**
அருட்தந்தை குணம் அடிகளார். (அ.ம.தி)

இறைபற்றுள்ள சகல குடும்பங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஏற்பாட்டாளர்கள்** : புனித லூசியாள் பெற்றோர் சங்கம், கொட்டாஞ்சேனை

# சிலாப மறைமாவட்டத்திற்கு புதிய குருமுதல்வர்



*வந்தனைக்குரிய அருட்பணி பிரசாத் சமிந்த பெர்னான்டோ அடிகளார்*

சிலாப மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக வந்தனைக்குரிய அருட்பணி பிரசாத் சமிந்த பெர்ணான்டோ அடிகளார், சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட்திரு தெவ்சித வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகையினால் நியமிக்கப்பட்டுள்ளார். 1973ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 11ஆம் நாள் சிலாபம் மரவல என்ற இடத்தில் பிறந்தார். இவர் 2002 புரட்டாதி மாதம் 14ஆம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு சிலாபம், தலவில ஆகிய இடங்களில் உதவிப்பங்குத்தந்தையாக பணியாற்றியதுடன், மறைமாவட்டத்தின் உதவி பொருளாளராகவும் வண்ணாத்துவில்லு, ராஜகதலுவ ஆகிய பங்குகளில் பங்குத்தந்தையாகவும் பணியாற்றி மக்கள் மனதில் இடங்கொண்டார்.

உரோம் உர்பானி பல்கலைக்கழகத்தின் திருச்சபையின் சட்டங்கள் பற்றிய பட்டப்படிப்பை மேற்கொண்ட இவர் சிலாப மறைமாவட்டத்தில் குடும்ப அப்போஸ்தலிக்க பணியகத்தின் இயக்குனராகவும் 2013ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகின்றார். 2015ஆம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் இவர் சிலாப மாவட்ட குருமுதல்வரான தனது, பதவியை பொறுப்பேற்கின்றார். இசையிலும் தனது திறமையைக் காட்டும் இவர் பலகலை நிபுணத்துவம் ெ பற்றவர். மக்களின் மகிழ்ச்சியில் மட்டுமல்ல அவர்களின் துன்பவேளையில் அவர்களைத்தேடிச் சென்று ஆறுதலளித்து இயேசுவின் அன்புப் பணிக்கு சான்று பகர்பவர். இவரது பணி தொடர வாழ்த்துகின்றோம்.

**தகவல் : பிலிசியா**

## திருச்சிலுவைப் பாதை

றாகமை தேவத்தை பெசிலிக்காவின் தமிழ் பாடற்குழுவினால் நடாத்தப்படும் திருச்சிலுவைப்பாதையானது வருகிற பங்குனி மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பகல் 12.15 மணிக்கு தமிழ் திருப்பலியுடன் நிறைவேறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**வழிநடத்துவோர் கிளரீசியன் குழுக்கள்**

# அறிவித்தல்

*நான் தாகமாயிருக்கிறேன்*
*யோவான் 1:28*

இயேசு சிலுவையில் தொங்கும்போது கூறிய இறுதி வார்த்தைகளில் நான் தாகமாயிருக்கிறேன். இவ்வார்த்தை அவருடைய மனிதத் தன்மையை எமக்கு எடுத்துக்காட்டுகிறது. இயேசு திருச்சபைக்கு வழிகாட்ட மீண்டும் இன்னொரு தபசு காலத்தில் உயிர்ப்பு இயேசுவுடன் அவரின் வழிநடந்துச் செல்ல சிலுவைப் பாதையில் வழியாக எமக்கு அழைப்பு விடுக்கிறார்.

திருத்தந்தை கூறியதுபோல: "தவக்காலம் என்பது ஒவ்வொரு மனிதனையும், சமூகங்களையும் திருச்சபையையும் புதுப்பிப்பதற்கு ஒரு உகந்த காலமாகும். இது ஒரு அருளின் காலமாகும். அன்பின் காலமாகும். இயேசுவின் வார்த்தைக்கு செவிமடுப்போம் அவரில் நம்பிக்கை கொள்வோம். நாம் எதனை புதுப்பிக்க வேண்டும் எம்மில் உள்ள மாற்ற முடியாதவைகளையும், எமது கடின இதயங்களையும், நாம் எதனை விசுவசிக்க வேண்டும்? இயேசு இன்றும் தாகமாய் இருக்கிறார். உன் மனதிலும், அவரின் பாடுகள் மரணம் வழியாக நினைவு கூர்ந்து ஏழைகள் அனைவரும் எமது சகோதர சகோதரிகள் என்ற நினைப்பை ஏற்படுத்துகிறது.

ஆகவே இவ்வருடத்திலும் ஏழ்மையில் வாழும், பல்வேறு பிரச்சினைகளில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கு ஆறுதல் அளித்து அவர்களுக்கு உற்ற துணையாக திருச்சபை செயற்பட வேண்டும். ஆதவற்ற குடும்பங்களுக்கு ஆறுதல் அளிக்க கொழும்பு மறைமாவட்டம் நடவடிக்கை எடுத்துள்ளது அவர்களின் வாழ்வு வளம் பெற அவர்களுக்கு உதவி செய்ய தீர்மானித்துள்ளது. நீங்கள் உங்கள் தவக்கால ஒறுத்தல் முயற்சிகள் ஒன்றுசேர்த்து வழங்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்

"பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்துக் கொடுப்பதும், தங்க இடமில்லாத வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும் அவர்களுக்கு உடுக்க கொடுப்பதும்,




உங்கள் இனத்தாருக்கு மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ, நான் விரும்பும் நோன்பு"
எசாயா 55:1-9)

*அருட்பணி ரொஹான் டி அல்விஸ்*
*இயக்குனர்*
*செத் சரன – கரிடாஸ்*
*கொழும்பு*

# டிலாசால் கல்லூரியின் நிகழ்வுகள் - 2015



கொழும்பு டிலாசால் கல்லூரியின் 2015ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டு மாணவர்களை உட்சேர்க்கும் வைபவத்திற்கு பிரதான அதிதியாக வருகைத் தந்த கிரான்பாஸ் பங்குதந்தை அருட்பணி. மார்க்கஸ் பேர்டினான்டஸ் அடிகளார், கல்லூரியின் அதிபர் அருட்பணி நியூமன் முத்துத்தம்பி அடிகளாரினால் வரவேற்று அழைத்துச் செல்லப்படுகின்றார்.



கொழும்பு டிலாசால் கல்லூரியின் 2015ஆம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதான அதிதியாக வருகை தந்து சிறப்பித்த கொழும்பு வலய கல்வி காரியாலய மேலதிக பணிப்பாளர் திரு. A. A D. M. C விஜயதுங்க அவர்களை, கல்லூரியின் அதிபர் அருட்பணி நியூமன் முத்துத்தம்பி அடிகளார் வரவேற்று அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.

**தகவல் : அருட்பணி. நியூமன் முத்துதத்தம்பி அடிகளார் அதிபர், டிலாசால் கல்லூரி**

# திறந்த வெளி சிலுவைப்பாதை





தவக்காலத்தை முன்னிட்டு வருடந்தோறும் கொழும்பு யோசேவ்வாஸ் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்படும் பெரிய சிலுவைப்பாதை இவ்வருடம் 22.2.2015 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது. அச்சிலுவைப்பாதையில் மக்கள் பக்தியோடும், விசுவாசத்தோடும் கலந்து கொண்டு செபிப்பதைப் படத்தில் காணலாம்

**தகவல் மற்றும் படம் : டிக்சன் பர்னாந்து**

# 2014.12.04 நடாத்தப்பட்ட ஒளிவிழா






பது/ஸ்பிரிங்வெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் வருடந்தோறும் நடக்கும் ஒளிவிழா நிகழ்ச்சி வெகு விமரிசையாக அதிபர் திரு.ளு. சண்முகராஜா, கிறிஸ்தவ மன்ற பொறுப்பாசிரியரான திருமதி அ. சகாயம் தலைமையிலும் காலை 10.00 ம ணியளவில் பாடசாலை மேல் மண்டபத்தில் நடந்தேறியது. அன்றைய தினத்தில் நிகழ்ச்சியின் பிரதம அதிதியாக பதுளை புனித மரியாள் பேராலய அருட்தந்தை ஞானராஜ் குரூஸ் அடிகளார் விழாவில் கலந்து கொண்டதோடு இறை ஆசீச்செய்தியையும் வழங்கிச் சென்றார். மேற்படி விழாவிலே மாணவர்களின் நடனம், நாடகம், கிறிஸ்தவ அபிநயப் பாடலகள் கரோல் கீதங்கள், பேச்சு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. நிகழ்ச்சியில் பங்கேற்ற அருட்தந்தை, உட்பட அதிதிகளை படத்தில் காணலாம்.

**தகவல் :**
**திருமதி அன்னம்மா சகாயம்**
**பதுளை**

இன்று இவ்வுலகில் சாதி, மத, இன வேறுபாடுகளைத் தாண்டி எல்லோருடைய இதயங்களைக் கொள்ளைகொண்டவர் திருத்தந்தை பிரான்சிஸ் என்றால் அது மிகையாகாது. தனது பணியினைப் பொறுப்பேற்று (மார்ச்13) இரண்டே ஆண்டுகள் ஆன நிலையில் "மக்களின் திருத்தந்தை" என்று செல்லமாக அழைக்கப்படுகின்றார். ஏன் இத்துணை செல்வாக்கு எம் திருத்தந்தைக்கு? இயேசு இவ்வுலகில் வாழும் காலத்தில் மக்களோடு மக்களாகத் தன்னை இணைத்துக் கொண்டவர். மக்களின் தேவைகளை அறிந்து, புரிந்து அதனை ஈடேற்றிக் கொடுத்தவர். மக்களிடம் இறையாட்சியை அன்பின் அதிகாரத்தோடு போதித்தவர். விடியலுக்காய் காத்திருந்த மக்களை விடியலுக்கு இட்டுச் சென்றவர். அதேபோன்றே இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இயேசு சபை துறவியாகிய நம் திருத்தந்தையும் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார். மக்களோடு தன்னையும் இணைத்துக் கொண்டு மக்களின் ஏக்கங்களைப் புரிந்தவராக, மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டு இருக்கின்றார் நம் திருத்தந்தை. இவருடைய மறைத்தூதுப் பணியைப் பற்றியும், அதனை நாம் எப்படி நமதாக்கலாம் என்பது பற்றியும் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன். அந்த வகையிலே 2013ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி நம் திருத்தந்தையால் வெளியிடப்பட்ட "நற்செய்தியின் மகிழ்ச்சி" (The Joy Of the Gospel) அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் இருந்து சில முத்துக்களை உங்களோடு பகிர விரும்புகின்றேன்.






# நற்செய்தியாளர் என்பது...

**அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி**

அடிப்படையிலேயே திருச்சபை (இறைமக்கள் சமூகம்) நற்செய்தி அறிவிப்புத் தன்மை கொண்டது. கிறிஸ்தவர்கள் அனைவரும் நற்செய்தி அறிவிப்புப் பணியாளர்களாகத் திகழ, கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் என்பதை இவ்வேடு தெளிவாக கூறுகிறது. கடவுள் எம்மை அன்புசெய்கிறார் என்பதே நற்செய்தி, நமது மகிழ்ச்சி, அன்பு நிறைந்த வாழ்வால் எல்லோராலும் நற்செய்தி அறிவிக்கமுடியும் என்று உறுதியாக நம்புகிறார் நம் திருத்தந்தை. கடவுளின் அன்பை நாம் சுவைப்பதற்காக பின்வருமாறு நம்மை அழைக்கிறார். "எங்குமுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும் இத்தருணத்தில், இயேசுக் கிறிஸ்துவுடனான ஒரு புதுப்பிக்கப்பட்ட, தனிப்பட்டச் சந்திப்புக்கு அல்லது அவர்களைக் கிறிஸ்து சந்திக்கக் குறைந்த பட்சம் அவரை அனுமதிக்கும் திறந்த மனத்தையாவது வழங்க அழைக்கின்றேன்." (இல.3) இது எல்லாருக்குமுரிய அழைப்பு. யாரும் இது தனக்குரியது அல்ல என்று தட்டிக்கழிக்கக் கூடாது என்றும் வலியுறுத்துகின்றார். கடவுள் நம்மை அரவணைக்க விரித்த கரங்களோடு காத்திருக்கின்றார். கடவுள் நம்மை மன்னிப்பதில் சோர்வுறுவதில்லை. நாம் தான் அவரது இரக்கத்தை நாடுவதில் சோர்ந்து போகின்றோம். என்றும் எம்மை தட்டிக் கொடுக்கின்றார்.

நற்செய்திப் பணியானது நம்மிடம் பெரும் தியாகங்களை எதிர்பார்க்கின்றது. இருப்பினும் இப்பணியை நாம் தனித்து செய்ய முடியாது. காரணம் நற்செய்தி அறிவிப்புப் பணி முந்த முந்த ஆண்டவரின் வேலையாகும். இயேசுவே தலைசிறந்த நற்செய்தி அறிவிப்புப் பணியாளர். நாம் தூய ஆவியாரின் துணையோடு, இயேசுவோடு ஒத்துழைக்க அழைக்கப்படுகின்றோம். "கடவுளே முதலில் நம்மை அன்பு செய்தார்." (1யோவான் 4:19) எனவே கடவுளிடமிருந்தே முதலில் இச் செயல் தொடங்குவதை நாம் அறிகின்றோம். ஆகவே நாம் பெற்றுக் கொண்ட அன்பை உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் கடைநிலைமக்கள், ஒடுக்கப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோர், உரிமை இழந்தோர், நீதி மறுக்கப்பட்டோர் அறநெறி மறந்து வாழ்வோர் போன்றோரை தேடிச் சென்று, அரவணைத்து, ஆண்டவரின் அன்புச் செய்தியை அறிவிக்க வேண்டும். இன்னுமாக திருச்சபையின் முதல் கடமை கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும் அல்லது அவரை எப்போதும் புறக்கணித்தவர்களுக்கும் அறிவிப்பது ஆகும். இதில் ஆர்வம் குன்றக் கூடாது. நற்செய்தி அறிவிப்புப் பணியில் அனைவரும் திறம்பட ஈடுபட வேண்டும் என்றால் திருச்சபையின் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதிகாரங்கள் ஓரிடத்தில் முடங்கிக் கிடப்பது தவிர்க்கப்பட வேண்டும். மறைமாவட்ட ஆயரிடமோ, பங்குத்தந்தையிடமோ அதிகாரங்கள் குவித்துக்கிடப்பது களையப்படவேண்டும். "வரம்பு கடந்த அதிகாரமயமாக்கல், உதவிபுரிவதற்குப் பதிலாக, திருச்சபையின் வாழ்வையும், அவளது மறைப்பணிச் செயற்பாடுகளையும் சிக்கலுக்குள்ளாக்குகின்றன." (இல.32) மேலும் "நற்செய்தி அறிவிப்புப் பணியாளர் ஒருபோதும் அடக்கச் சடங்கிலிருந்து வருபவர் போல் காணப்படல் கூடாது". (இல.10) எனவும் கூறுகின்றார். ஆக நற்செய்தி அறிவிப்பாளர் தூய ஆவியால் நிரப்பப்பட்டவர்களாகவும், துணிச்சல் நிறைந்தவர்களாகவும், எச்சூழ்நிலையிலும் நற்செய்தியை அறிவிக்க வழி தேடுபவர்களாகவும், கடின உழைப்பாளிகளாகவும், செபவீரர்களாகவும் இருக்கவேண்டும் என்கின்றார் திருத்தந்தை.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் மேற்கண்டவாறு இருக்க வேண்டுமென பின்வருமாறு தெளிவுபடுத்துகின்றார். "காயப்பட்ட துன்புறும் அழுக்கான திருச்சபையையே நான் விரும்பித் தேர்வுசெய்கின்றேன். எனவே திருச்சபை அமைப்பு முறையில், ஒருபொய்யான பாதுகாப்பு வலையில் சிக்கித் தவிக்காமல், சட்டதிட்டங்களை நமது வசதிக்காகச் சுட்டிக்காட்டி, கடுமையான நீதிபதிகளாக இராமல், குருக்கள் மற்றும் துறவற ஆடைகளில் வாய்ப்பு, வசதி, மதிப்பு, மரியாதைத் தேடாமல். எமது வாசல்களுக்கு வெளியே ஏழ்மையினால் பசியினால் வாடும் எளியோருக்கு உணவு கொடுக்கின்றவர்களாகப் பணியாற்ற அழைக்கப்படுகின்றோம்". (இல.49)

அடுத்து முக்கிய கருப்பொருளாக அமைவது மறையுரை. இதுவே நற்செய்தி அறிவிப்புப் பணியின் மிக முக்கிய அம்சமாகும். மறையுரையாளர் வழியாக கடவுளே பேச விரும்புகிறார். "ஏனெனில் நமது ஆண்டவர் நமது வார்த்தைகள் வழியாகப் பிறரைச் சென்றடைய விரும்புகிறார்". (உரோ 10:14) அவரது வார்த்தையில் நமது ஆண்டவர் மக்களின் இதயங்களை வென்றெடுத்தார். எல்லா இடங்களிலிருந்தும் அவர் பேசுவதைக் கேட்க மக்கள் வந்தனர்.(மாற்கு 1:45) அவர் போதனையைக் கேட்டு மக்கள் மலைத்துப் போயினர். (மாற்கு 6 : 2) மேலும், அதிகாரமுள்ள ஒருவர் போல் அவர் அவர்களிடம் பேசியதை உணர்ந்தனர்.(1:27)

"தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும்" (மாற்கு 3 : 14), கிறிஸ்து நியமித்த திருத்தூதர்கள் தங்களின் வார்த்தைகளால் எல்லா நாடுகளையும் திருச்சபையின் உறைவிடத்துக்கு கொண்டு வந்தனர். (மாற்கு 16 : 15-20) தொடக்கத் திருச்சபையைக் கட்டியெழுப்புவதில் திருத்தூதர்களின் போதனை மிகுந்த பலனளித்தது. அதுவே இன்றியமையாததாய் அமைந்தது. எனவேதான் ஒவ்வொரு அருள்பணியாளரும் மறையுரையை மிகுந்த கவனத்தோடு தயாரித்து மிகச் சுருக்கமாக, தெளிவாக அமைக்க வேண்டும். வகுப்பறை (பாடவேளை) போல நீண்டதாக இருக்கக் கூடாது. மாறாக ஓர் தாய் தன் குழந்தையிடம் உரையாடுவதுபோல், இதயத்தோடு இதயம் செய்யும் உரையாடலாக அமைய வேண்டும். மக்களை தொடாதவாறு மேலோட்டமானதாக, அறநெறிகோட்பாடுகளை எடுத்துக்கூறுவதாக அமையக் கூடாது. (இல. 135 - 142) மறையுரை நல்லெண்ண அக்கறையுடன் தயாரிக்கப்பட்ட நீண்டநேர வாசிப்பு, செபம், தியானம் கட்டாயம் தேவை எனச் சொல்கிறார் திருத்தந்தை. "மறையுரை தயாரிக்காத மறைப்போதகர் ஆன்மீகமற்றவர். இவர் தான் பெற்றுள்ள கொடைகள் மட்டில் நேர்மை அற்றவராகவும்,பொறுப்பற்றவராகவும் இருக்கின்றார்". (இல.145) என்று கடுமையாக விமர்சிக்கிறார்.

நற்செய்தி அறிவிப்புப் பணிக்கும் நல்வாழ்வுக்கும் இடையே உள்ள உறவை இவ்வேடு சுட்டிக்காட்டுகிறது. இயேசு நமக்காக. நம் மீட்புக்காக தமது விலைமதிப்பில்லா இரத்தத்தைச் சிந்தினார். நாமும் இயேசுவைப் போலஏழை,எளியோரின் கண்ணீரைத் துடைக்க, அவர்களின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டும். ஏனென்றால் ஏழைகளுக்காக நாம் செய்வதெல்லாம், தனக்கே செய்ததாக இயேசு கூறுவார். (மத் 25:40) எனவேதான் "திருச்சபையானது, ஏழைத்திருச்சபையாக, ஏழைகளின் திருச்சபையாக, ஏழைகளுக்கான திருச்சபையாக இருக்கவேண்டுமென்று நான் விரும்புகின்றேன். அவர்களிடம் நாம் கற்றுக் கொள்ள நிறைய இருக்கின்றது. ஏழைகளால் நாம் நற்செய்தி அறிவிக்கப்பட அனுமதிக்க வேண்டும்". இன்றைக்கு ஏழைகள் அனுபவிக்கின்ற மிகமோசமான பாகுபாடு அவர்களுக்கு ஆன்மீகக் கவனமளிக்காததுதான்... ஏழைகளில் பெரும்பாலானோர் இறைநம்பிக்கைக்குத் திறந்த மனமுடையவர்களாக உள்ளனர். (இல.200) இயேசுதாம் மிகச் சிறந்த நற்செய்தியாளர். அவரே நற்செய்தி இயேசு சிறு குழந்தைகளோடு தம்மை அடையாளாப்படுத்திக் கொண்டார். இதன் வழியாகத் தாமும் பலவீனமானவர்கள் மட்டில் அக்கறை செலுத்தவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றார். பலவீனமானவர்கள் யார் யார் என்பதை இவ் ஏட்டில் அடையாளமிட்டுக் காட்டுகின்றார். "மந்தமானவர்கள், வலிமையற்றவர்கள், ஆற்றல் குறைந்தவர்கள், வீடில்லாதவர்கள், போதை பழக்கத்திற்கு ஆளானவர்கள், அகதிகள், தனிமைப்பட்டு கைவிடப்பட்ட முதியவர்கள், புலம் பெயர்ந்தோர், அடிமைகள், பிச்சை எடுக்கப் பயன்படுத்தப்படும் குழந்தைகள், விபச்சாரவிடுதிகளில் இருக்கும் பெண்கள், சுரண்டப்படுகின்ற தொழிலாளர்கள், வன்முறைக்கு உள்ளாகும் 'பெண்கள்" இப்பேர்பட்டவர்களின் நல்வாழ்வில் அக்கறை கொள்ள அழைக்கின்றார். (இல. 210 - 213) இத்தகைய சீரற்ற வாழ்க்கைச் சூழலில் நீதி, அன்பு, அமைதி, சகோதரத்துவம் மற்றும் சமத்துவத்திற்கான நமது குரல் ஒலிக்க வேண்டும்....

*தொடர்ச்சி 15ம் பக்கம்.*




# இனிமையான இல்வாழ்விற்கு...!

5

உண்மைக் காதல் வளர்ந்துகொண்டே போகும். தேய்பிறை போல் தேய்ந்துகொண்டே போகாது உண்மைக் காதல். நுனிக் கரும்பு அவ்வளவாக இனிக்காது. ஆனால், அடிக்கரும்பு தித்திக்கும். முதலில் இனித்து முடிவில் கசப்பது உண்மைக் காதல் ஆகாது. முதலில் கசந்தாலும் முடிவில் இனிப்பதே உண்மைக் காதல். ஆனால் இன்று பலருடைய திருமண அன்பு ஆரம்பக் கட்டத்தில் தித்திக்கிறது, போகப் போகப் புளித்துப்போகிறது.

திருமண அன்பை ‘தி.மு’, ‘தி.பி’ என்று நாமே ஆய்வு செய்வது நன்று. சில சமயங்களில் மணவாழ்வில் பின்னடைவு ஏற்படுவதற்குக் காரணம் உள்ளத்திற்குச் செல்வதில்லை. அதாவது காமம் காதலாகக் கனிவதில்லை. காமம் என்பது இரு உடல்களின் தாளம். காதல் என்பது இரு இதயங்களின் கீதம். மணவாழ்வின் ஆரம்ப கட்டத்தில் மணமக்கள் உடற்கவர்ச்சியால் ஈர்க்கப்படுவது இயல்பு. ஆனால், நாள்கள் செல்லச் செல்ல, உடற்கவர்ச்சி உள்ளக் கவர்ச்சியாக முதிர்ச்சி அடைந்து, இறுதியில், அது உயிர்க் கவர்ச்சியாகப் பரிணமிக்க வேண்டும்.

## பெண்மை வாழ்க, தாய்மை வாழ்க!

கணவன், மனைவி ஆகிய இருவரும் காந்தமும் இரும்பும் போல ஒருங்கிணைந்து உருவாக்க வேண்டியது தான் இல்லறமேயன்றி, கணவனோ, மனைவியோ தனித்து எழுப்பக் கூடியது இல்வாழ்வு அன்று என்று எடுத்துரைக்கிறது மனோன்மணீயம்.

## “இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மையில்”

ஓர் ஊரில் ஒருவன் மற்றொருவனைச் சுட்டிக் காட்டி, “இவன் மாபெரும் கஞ்சன், தேன் நிலவுக்குக் கூடத் தனியாகப் போய்விட்டு வந்தான். மனைவியைக் கூட்டிக்கொண்டு போகவில்லை” என்று நக்கலாகக் கூறினான். இது நகைச்சுவைக்குச் சரி, வாழ்க்கைக்குச் சரிப்பட்டுவராது.

பெண் அவளது கணவனோடு சரிநிகர் மாண்பும் கடமையும் உரிமையும் உடையவள் என்றாலும் பாரதியின் கூற்றுப்படி, மனைவி என்னுடைய எல்லா அலுவல்களிலும் பொறுப்புகளிலும் அவருக்கு உற்ற துணையாக இருந்து, இல்லறத்தை நல்லறமாக மலரச் செய்தல் வேண்டும்!.

**காதலொருவனைக் கைப்பிடித்தே – அவன்**
**காரியம் யாவினும் கை கொடுத்து**
**மாதர்தங்கள் பழமையைக் காட்டிலும்**
**மாட்சி பெறச் செய்து வாழ்வமடி**

**[பெண்கள் விடுதலைக் கும்மி]**

இல்வாழ்க்கையின் வெற்றி தம்பதியர் இருவரையும் சார்ந்தது எனினும், குடும்பத்தின் விளக்காக அமைகின்றவள் மனைவி என்பதை யாரும் மறுக்க இயலாது. ‘மனைவி’ என்ற சொல்லுக்கு அறிஞர்கள் கூறும் விளக்கம் ‘மனை’ என்றால் ‘வீடு’, ‘வி’ என்றால் ‘விளக்கு’. வீட்டிற்கு விளக்காக இருப்பவள் மனைவி. ‘மனைக்கு விளக்கு’ என்பதுதான் குறுகி ‘மனைவி’ என்றானது. “மனைவி நல்லவளாக அமைந்துவிட்டால், அந்த வீட்டிலே ஒன்றுமே இல்லை என்றாலும் எல்லாமே இருக்கிறது. மாறாக, மனைவி நல்லவளாக வாய்க்கவில்லை என்றால் எல்லாம் இருந்தாலும் ஒன்றுமே இல்லை” என்கிறார் பொய்யா மொழிப்புலவர்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள்**
**மாணாக் கடை**

பெரிய மரத்தை மண்ணுக்குள் இருந்து பிறர் கண்ணுக்குத் தெரியாமல் தாங்குகிறது வேர். அதுபோல் வீட்டிற்குள் இருந்து, வெளியுலகத்திற்குத் தெரியாமல் குடும்பம் என்ற பெரிய மரத்தை தாங்கிக் கொண்டிருக்கின்றவள்தான் மனைவி. எனவேதான், மனைவி அமைவது இறைவனின் வரமாகின்றது. ஆவதும் அவளாலே, அழிவதும் அவளாலேதான் (இன்பம் ஆவதும் பெண்ணாலே, துன்பம் அழிவதும் பெண்ணாலே)

ஒரு பெண் விரும்பினால் தொட்டதையெல்லாம் பொன்னாக்கலாம் அல்லது மண்ணாக்கலாம். ஒரு பெண் நினைத்தால் தாயாகலாம் அல்லது பேயாகலாம். ஒரு பெண்ணால் வீட்டை ஒளிமயமாக்க முடியும் அல்லது இருள்மயமாக்க முடியும். ஏற்றத்திற்குக் காரணமாய் இருப்பவரும் பெண், ஏமாற்றத்திற்கு காரணமாய் இருப்பவரும் பெண். எழுச்சியைத் தருகின்றவரும் பெண், வீழ்ச்சியைத் தருகிறவரும் பெண். ஆணைத் தூங்கவைத்துப் பார்க்கிறவளும் பெண், அவனை ஏங்க வைத்துப் பார்க்கிறவளும் பெண். ஆக்க சக்தியும் அவளே, அழிவுச் சக்தியும் அவளே.

பழந் தமிழகத்திலே பிசிராந்தையர் என்ற புலவர் பெருமகனார் ஒருவர் இருந்தார். அவர் வயதாகி, மூப்படைந்த நிலையிலும் அவர் தலைமுடி ஒன்றுகூட நரைக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்று அவரைக் கேட்டதற்கு அவர் கூறிய பதில் “எனக்கு வாய்த்த மனைவி நல்லவள்”. அதைப் போலவே, தன் பிள்ளைகளும் மனைவியும் மக்களும் நல்லவர்களாக அமைந்துவிட்டால், அவருக்குக் கவலை என்பதே இல்லை. இல்லாததால் தலை நரைக்கவில்லை.

வள்ளுவரின் மனைவி வாசுகி இறந்த பின் வள்ளுவரின் கண்கள் உறக்கத்தை மறந்தன. இக்கருத்தை விவிலியம் வலியுறுத்தும் போது “நல்ல மனைவியைக் கண்டுபிடிக்கிறவன் நன்மையைக் கண்டுபிடிக்கிறான், அது கடவுள் கொடுத்த மகிழ்ச்சிக்குரிய கொடையாகும்”




(பழமொழி 18:22). வீடும் செல்வமும் தாய், தந்தையால் தரப்படுகின்றன. ஆனால், தக்க, விவேகமுள்ள மனைவி ஆண்டவராலேயே தரப்படுகின்றாள் (பழமொழி 19:14)

உண்மையில் பெண்கள் எவ்வளவு சிறப்புடை-யவர்களென்றால் நிலவைப் பெண்ணாகவும் நதியைப் பெண்ணாகவும், மலரைப் பெண்ணாகவும் வர்ணிக்கின்றோம். நாட்டைத் தாய்நாடு என்றும், மொழியைத் தாய்மொழி என்றும், தமிழை கன்னித் தமிழ் என்றும், நிலத்தைப் பூமித்தாய் என்றும் அழைக்கின்றோம். கலைக்குரியவள் கலைமகள் செல்வத்திற்குரியவள் அலைமகள், வீரத்திற்குரியவள் மலைமகள்.

கவிக்கோ அப்துல் ரகுமான் கூறுவார், “ஓர் ஆணின் துணையின்றி இறைவன் மனிதனாகப் பிறக்க முடிந்தது. ஆனால் ஒரு பெண்ணின் துணையின்றி அவரால் அது இயலவில்லை. அதற்கு இயேசுக்கிறிஸ்துவே சாட்சி” என்று.

“காலம் நிறைவுற்றபோது கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக அனுப்பினார்” (கலா 4:5) “இறைவன் கன்னி மரியாளிடமிருந்து மனித உடலெடுத்ததன் வழியாகப் பெண்ணின் மாண்பை மிக உயர்ந்த விதத்தில் காட்டியுள்ளார்” என்கிறார் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர்.

“பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப்போகுமா? பால் குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ, அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்துவிட்டாலும் நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்” (இசை 49:15). இறைவன் தனது அன்பைத் தாயன்போடு ஒப்பிட்டு, தாயன்பையும் தனதன்பு மிஞ்சியது என்கிறார்.

விவேகானந்தரிடம் “தந்தையைவிடத் தாய்க்குத்-தான் எல்லா நாடுகளிலும் அதிக மதிப்பளிக்கின்றார்களே, காரணமென்ன” என்று கேட்கப்பட்டது. அவர் இரண்டு கிலோ எடையுள்ள கல்லைக் கொடுத்து, “இதை உன் மடியில் ஒரு வாரம் கட்டியிருந்துவிட்டு, பின் வா, பதில் கூறுகின்றேன்” என்றார். அவனால் 1மணி நேரம்கூட அதனைக் கட்டியிருக்க முடியவில்லை. “10 மாதம் சுமக்கும் தாயின் அந்தப் பொறுமை காரணமாகவே அவள் தந்தையைவிட அதிகம் மதிக்கப்படுகிறாள், வீட்டை ஆள்பவள் தாய்” என்றார்.

இயேசு கிறிஸ்துவுக்கு ‘எல்சடாய்’ என்ற பெயருண்டு. ‘தாயைப் போன்ற மாண்புடையவர்’ என்று பொருள். தாய்மையைக் காட்ட இப்பெயர் பொருத்தமாக உள்ளது.

## நல்ல கணவன்

‘நல்ல கணவன்’ என்று எவனுமே இல்லை. ஒரு நல்ல மனைவிதான் ஒரு நல்ல கணவனை உருவாக்குகின்றாள். ஒரு நல்ல மனைவி காமுகனையும் கண்ணியவனாக்குகின்றாள். மாறாக, ஒரு தீய மனைவி கண்ணியவானையும் காமுகனாக்குகின்றாள். பெண்கள் கள்ளாக அல்ல, காவியமாகத் திகழவேண்டும். கள் குடிப்பவன் வாயிலே நாறுகின்றது. ஆனால் காவியமோ படிப்பவன் வாயிலே மணக்கிறது. எனவே, நல்ல கணவனை உருவாக்குபவரும் பெண்ணே, ஒரு கணவரின் முக மலர்ச்சியைப் பார்த்தே அவன் மனைவியை அறியலாம்.

## உண்மை அழகு

‘நாலடியார்’ பெண்களுக்கு எது அழகு என்று நயம்படக் கூறுகின்றது.

‘கூந்தலின் அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல’ மாறாக, ‘கல்வி அழகே அழகு’ என்கிறார். பெண்கள் தங்கள் உடல் அழகால் அல்ல. ஆனால் உள்ளத்தின் பண்பால் ஆண்களைக் கவர்தல் வேண்டும். உடல் அழகு நிலையானதன்று, மாறக்கூடியது. இக்கருத்தை வலியுறுத்த வந்த விவிலியம், “சடை பின்னுவதும் பொன் நகைகள் அணிவதும் உடை மாற்றுவதுமாகிய வெளி அலங்கரிப்பில் உங்கள் அழகு அமையாமல், சாந்தமும் அமைதியுமுள்ள மனப்பான்மையாகிய அழியாத அலங்கரிப்பில் அமையட்டும். அந்த அலங்கரிப்போ மனித உள்ளத்தில் மறைவாக இருப்பதொன்று. அதுவே கடவுள் முன்னிலையில் உயர்ந்தது” (1பேதுரு 3:34) என்ற பேதுருவின் அறிவுரையை அனைத்துப் பெண்களும் கடைப்பிடித்தல் நலம் பயக்கும்.

திருச்சபையின் அழகு நிலையம் (Beauty Parlour) ஒப்புரவு அருட்சாதனம். ஆம், நம் அழுக்கு நீக்கி, அருளழகு சேர்க்க இத்திருவருட்சாதனத்தைப் போதுமான அளவு பயன்படுத்திக் கொள்வோம்.

## ஏற்றமிகு இல்வாழ்வு

**“உற்ற நிரைவிலோர் கள்ளம் புகுந்திடில்**
**உள்ளம் நிறைவாமோ – நன்னெஞ்சே,**
**தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்**
**சேர்த்தபின் தேனாமோ – நன்னெஞ்சே”**

**என்கிறார் பாரதி.**

அதாவது தித்திக்கும் தெள்ளிய தேனிலே ஒரு துளி நஞ்சு கலந்துவிட்ட பின்பு அது தேனல்ல. மாறாக அது நஞ்சு. அவ்வாறே நிறைந்த நெஞ்சிலே ஒரு சிறு கள்ளம் புகுந்துவிட்டால் நிறை நெஞ்சம் குறை நெஞ்சமாகிவிடுகிறது. அதன் பின் அது நெஞ்சமல்ல. நஞ்சு என்கிறார் பாரதி.

அன்பு பொங்கும் இல்வாழ்வு பகைமை மிக்கதாகவும் ஏற்றமிகு இல்வாழ்வு ஏமாற்றம் மிக்கதாகவும், இனிப்பான இல்வாழ்வு கசப்பானதாகவும் காலப் போக்கில் மாறிவிடுகின்றது. தென்றலுக்குப் பதிலாகப் புயல் வீசுகிறது. குளிர வேண்டிய நெஞ்சம் குமுறுகிறது. கோமகன் குடியிருந்த இடத்திலே குட்டிச்சாத்தான் புகுந்துவிடுகிறான். சீதேவி இருந்த இடத்தில் மூதேவி வந்துவிடுகிறாள்.

இப்படி, இன்பமான இல்வாழ்வை இல்லாமல் செய்யும் தலைமைப் பேய் (HOD) தன்னலமாகும். இந்தப் பேய் நுழைந்து வீடு ஆமை புகுந்த வீட்டைப் போல, அது வீடல்ல, சுடுகாடு தன்னலமானது பிறரைத் தனக்குப் பயன்படுத்துகிறது. பொருட்களைப் பயன்படுத்தி, ஆட்களை அன்புசெய்தல் வேண்டும். ஆனால், நாமோ அதற்கு நேர்மாறாகச் செயல்படுகிறோம். அதாவது, ஆட்களைப் பயன்படுத்திப் பொருட்களை அன்பு செய்கிறோம் என்று ஒரு மனிதன் மற்றொரு மனிதனைத் தனக்குப் பயன்படுத்த நினைக்கின்றானோ அன்று முதல் மற்றவன் அவன் கண்களுக்கு ஓர் ஆளாக அல்ல, மாறாக, பொருளாகத்தான் தோன்றுவான். கணவனும், மனைவியும் ஒருவர் மற்றவரைத் தங்களின் சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் போது இருவருமே மனித மாண்பை இழக்கின்றனர்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

பிரான்சியப் புரட்சியின் பின்னர் போர் ஓய்ந்திருந்த வேளையில், அன்றைய கலாச்சார, சமூக, அரசியல் மற்றும் சமய சூழமைவுகளை தியானித்து, அதற்கு மேலாக இறையரசை பறைசாற்ற, தூய இயூஜின் ஏற்படுத்திய அமலமரித்தியாகிகள் சபை கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் 200 வருடங்களாக பல நம்பிக்கை, நேர்மையான நேரடிப் பேச்சு, கூர்மையான அறிவு, ஈகையுள்ளம், ஏழைகள் மட்டிலான அன்பு போன்ற நல்ல பண்புகள் அவரின் இதயத் துடிப்பிலும், மூச்சிலும், பேச்சிலும் கலந்து வளர்ந்தன. 1807 இல் பெரிய வெள்ளியன்று சிலுவையில் அறையுண்ட இயேசுவை உற்று நோக்கினார், தன் அக்காலத்தில் மக்களின் துன்பநிலையை கண்டு அவர்களுக்கு வாழ்வு கொடுக்க, இயேசுவின் நற்செய்தியின் ஒளியில் மக்களை ஒன்றிணைக்கப் புறப்பட்டார். கடவுளுடைய மகிமைக்காகவும், திருச்சபையின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல் வாழ்விற்காகவும் தன்னை அர்ப்பணித்த புனித இயூஜின் டி லியோவிடம் கையளித்து அனுமதி வேண்டினார். காலத்தின் தேவை கருதி பணிசெய்யும் அச்சபைக்கு அமலமரித்தியாகிகள் எனப்புதுப்பெயர் சூட்டி 17-2-1826 இல் திருச்சபையில் ஒரு துறவறசபையாக பணியாற்ற திருத்தந்தை அங்கிகாரம் வழங்கினார். மிகவும் குறைந்த உறுப்பினர்களை கொண்டு தங்கள்




# அர்ப்பண வாழ்வின் ஆண்டு

Conference of Major Religious Superiors of Sri Lanka (CMRS)

## இலங்கையில் பணியாற்றும் துறவற சபைகள்

# அமலமரி தியாகிகள் சபை

நாடுகளில் பணியாற்றி வருகின்றது. இன்று 4440 அமலமரித்தியாகிகள் குருக்களாக, அருட்சகோதரர்களாக, முதல் வாக்குத்தத்தத்துடன் உருவாக்கம் பெறுபவர்களாக உலகின் பலபாகங்களிலும் பணியாற்றி வருவது வெளிப்படையுண்மை. "எளியோர்க்கு நற்செய்தி நவில" என்ற விருதுவாக்குடன் பணியாற்றும் அமதிகள் சபையின் உருவாக்கம், நோக்கம், பணிவாழ்வு பற்றி எடுத்துரைப்பது சாலச்சிறந்தது.

பலருக்கு பலவிதமாக இறையனுபவத்தை காண்பிக்கும் ஆவியானவர் பிரான்சு நாட்டு புறவான்ஸ் நகரின் சின்னப்பிரபு புனித இயூஜின் டி மசனட் மேலும் நிழலிட்டார். இறைவனில் ஆழ்ந்த விசுவாசம், செபம், மரியன்னையில் நிகழ்கால வாழ்வை நினைத்தார், தெளிவுபெற்றார், உள்ளம் உருகினார், இயேசுவிடம் சரணடைந்து தன்னை அவருக்கே கையளித்தார். குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு இறைப்பணியை தொடர்ந்தார் இவர் தான் உலகெங்கும் பணியாற்றும் அமலமரி தியாகிகளின் இதயத்துடிப்பு. அமலமரி தியாகிகள் சபையின் நிறுவுனர்.

சிறுவயதில் அவர் அனுபவித்த துன்ப வழுக்கள், அகதி வாழ்க்கை, அவரை இயேசுவின் சிலுவையின் கண்ணோட்டத்தில் சிந்திக்கத் தூண்டியது. மசனட், தன்னுடன் பயணிக்க கூடிய சில குருக்களையும் இணைத்து 25-1-1816 இல் அமலமரித்தியாகிகள் சபையை நிறுவினார். அங்கத்தவர்களின் குழும வாழ்க்கை, ஏழைகளுக்கு நற்செய்தி நவிலல் என்னும் விருதுவாக்கோடு உருவாக்கப்பட்ட அமலரிமத்தியாகிகள் சபை புறவான்சின் மறைபரப்பாளர் சபை என அம் மறைமாவட்டத்தால் அங்கிகரிக்கப்பட்டது. பின்னர் முழு திருச்சபையின் அங்கிகாரத்தை பெற சபையின் நோக்கம், வாழ்வு என்பவற்றை சபைச் சட்டமாக எழுதி, திருதந்தந்தை 12ம் பணியை ஆரம்பிக்க தொடங்கினாலும், உலகனைத்திற்கும் இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே இவர்களது விருதுவாக்கு. இதனால் தான் அன்று "புனித பவுலுடைய இதயத்தை போன்றவர்" என்று புனித இயூஜினை அடையாளம் காட்டப்பட்டார்.

சபையின் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை பணித் துடிப்பினாலும், இறைஅனுபவத்தினாலும், மனித உணர்வுகளினாலும், உந்தப்பட்ட அமலமரித்தியாகிகள், பொய்யான உலகத்தின் போக்கை மாற்றி, பழமைகள் களைந்து மனிதம் வாழ புதுமைகள் புகுத்தி, உண்மையை போதித்து, போதனையை வாழ்வாக்கி, வாழ்க்கையினைப் பணியாக்கி, வலுவிழந்தோருக்கு வலிமையும், நோயுற்றோருக்கு சுகவாழ்வும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமைவாழ்வும் அளித்து மனிதத்தை மேம்படுத்திய இயேசு ஆண்டவரின் இறையாட்சிப் பணிக்கான ஊழியர்களாக உலகம் முழுவதும் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். "நீங்கள் செய்யும் திருப்பணிக்கு நீங்கள் அணியும் திருச்சிலுவையே சாட்சி" என்ற தூய இயூஜினின் வார்த்தைக்கேற்ப ஒவ்வொரு அமலத்தியாகியும் திருச்சிலுவை அணிந்து, அமலமரிக்கு தங்களை ஒப்புக்கொடுத்து பணியாற்றுவதனால் திருச்சபை வரலாற்றில் அவர்களின் பணியினை கட்டமிட்டு காட்டமுடியும். ஒல்லாந்த ஆணவத்தால் அழிந்து கொண்டிருந்த இலங்கைத் திருச்சபைக்கு புத்துயிர் அளித்த பெருமை புனித யோசெவ் வாஸையே சாரும். அவரைத் தொடர்ந்து இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்கு பல...

தொடர்ச்சி 15ம் பக்கம்

# இலங்கை - மண்ணில் திருக்குடும்ப சபை

இலங்கையில் கிறிஸ்துவை அறிவித்த பெருமை ஐரோப்பிய நாட்டிலிருந்து நற்செய்திப் பணிக்காக வருகை தந்த ஐரோப்பிய குருக்கள், துறவிகளையே சாரும். இவர்கள் அனைவரும் நற்செய்தி தூதுவர்களாக, பல்வேறு துறவற சபைகளில் இருந்து இந் நாட்டிற்கு அனுப்பப்பட்டவர்கள். இவர்களில் சிறப்பாக பெண் துறவற சபைகளில் திருக்குடும்ப சபையே இலங்கையில் கால்பதித்த முதல் துறவறசபையாகும். இவர்கள் 1862ம் ஆண்டு கார்த்திகை 2ம் திகதி யாழ்ப்பாணத்தில் கால் பதித்து பின் இலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் பரவி, தம் வாழ்வின் பிரசன்னத்தாலும், அன்புப் பணிகளாலும், பலரின் மனங்களைக் கவர்ந்து கடவுள்பால் அவர்களை அழைத்து சென்றனர். இவர்கள் நற்செய்தியை மனித மனங்களில் பதியவைக்க "இறைவன் மாத்திரமே" என்ற சபையின் மனப்போக்குடன், வீரத்துவ உணர்வுகளோடு காலத்தின் தேவையை நோக்கி வெளிப்படுத்தப்பட்ட பணிகளை முன்னெடுத்துச் சென்றனர்.

17ம் நூற்றாண்டில் பிரான்சியப் புரட்சியில் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்துவதற்கென போர்டோவைச் சேர்ந்த **பியர் பியன்வெனு நோஆய்** என்னும் பெயர் கொண்ட குருவானவரால் 1820 ல் திருக்குடும்ப சபை ஆரம்பிக்கப்பட்டது. 1822 மாசித் திங்கள் 3ம் நாளில் நற்கருணை ஆசீர்வாதத்தின்போது தோன்றி ஆசீர்வதித்த யேசுவின் உண்மையான பிரசன்னம் பல போராட்டங்கள், சவால்கள் மத்தியில் திருக்குடும்ப சபையின் வாழ்வும் பணியும் தேவை என்பதை உறுதிப்படுத்தியது.

முன்னேறிச் செல்லுங்கள் என்ற ஸ்தாபகரின் ஆசிமொழிக்கிணங்க இச்சபை சகோதரிகள் 4 கண்டங்களிலுள்ள 24 நாடுகளில் பரந்து சென்று பணியாற்றி வருகின்றனர். இன்று எமது சபை 5 அழைத்தல்களைத் தன்னகத்தே கொண்ட பரந்து விரிந்த நோக்கோடு ஒரு தந்தை பிள்ளை என்ற உறவுக்குள் அனைவரையும் அனைத்தையும் ஒரு குடும்பமாக ஒன்றிணைக்கின்ற பணியை முன்னெடுத்துச் செல்கின்றது. இவர்கள் :

1) திருக்குடும்ப அப்போஸ்தலிக்க துறவிகள்
2) திருக்குடும்ப தியான யோக துறவிகள்
3) திருமட சார்பற்ற துறவிகள்
4) திருக்குடும்ப பொதுநிலையினர்
5) திருக்குடும்ப குருக்கள்

### 1) திருக்குடும்ப அப்போஸ்தலிக்க துறவிகள்

முதல் பெண் துறவிகளை இலங்கை திருச்சபைக்கு அழைத்த பெருமை யாழ்ப்பாணத்தையும் அமலமரி துறவறக் குருக்களையுமே சாரும் அப்போது யாழ் ஆயராக விளங்கிய சமேரியா.அ.ம.தி.ஆண்டகை அவர்கள் இளைஞர்கள் அறிவுத்துறையிலும் ஒழுக்க நெறிகளிலும் விசுவாசத்திலும் உயர்ந்தோர் ஆகவேண்டும் என்ற நோக்கோடு கல்வித்துறையை முன்னெடுத்தார். அதில் பெண்களுக்கான கல்வியை தி.கு.துறவற அப்போஸ்தலிக்க சகோதரிகள் முன்னெடுத்ததோடு அநாதைகள் நலிவுற்றோருக்கு புகலிடமாகவும், நோயாளரைப் பராமரிப்பவர்களாகவும், காலத்தின் தேவைக்கு கைகொடுத்து நின்றார்கள். இவர்கள் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பெண்கள் கல்வியிலும் அவர்களது ஆளுமை உருவாக்கத்திலும் விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதிலும் தம்மை அர்ப்பணித்து பணியாற்றி வருகின்றனர். 153 வது ஆண்டில் கால் பதிக்கும் வேளையில் சகோதரிகளின் வாழ்வையும்,பணியையும் மீட்டுப் பார்க்கையில் அவர்களது அயராத உழைப்பும், பல சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டின் பல பகுதிகளிலேயும் (11 மாவட்டங்களில்) துணிவோடு பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. எமது நாட்டில் தோன்றிய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சிறப்பாக தொடர்ச்சியான 30 வருடபோர்ச் சூழலில் எல்லோர்க்கும் எல்லாமாக மக்களோடு மக்களாக பயணித்து மக்களுக்கு நம்பிக்கையூட்டி வாழ்வு கொடுப்பதில் முனைந்து செயற்பட்டனர். அப்போஸ்தலிக்க சகோதரிகள் முன்னெடுக்கின்ற இக்காலத்து பிரதான பணிகள்...

1. கல்வி
   - ✪ முறைசார்ந்த
   - ✪ முறைசார்பற்ற
2. இளம் பிள்ளைகளின் வாழ்வை வளம்படுத்த விடுதிச் சாலைகள் நடத்தல்.
3. வேறுபட்ட திறனுள்ள சிறுவரை பராமரித்தல். (Differently abled)
4. தொழுநோயாளர் பராமரிப்பு
5. உளவள ஆற்றுப்படுத்தல்கள்.
6. மலையக மக்களின் பணி
7. முன்பள்ளிச் சிறுவர் பாடசாலை
8. மறைக்கல்வி வகுப்பு, அருட்சாதன ஆயத்தங்கள்
9. பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார பயிற்சிகள்.
10. ஏனைய துறவற சபைகளுடன் இணைந்த நீதி சமாதானத்துக்கான முன்னெடுப்புக்கள்.

### திருக்குடும்ப சபையின் தியான யோக அழைத்தல்

1822 ம் ஆண்டில் நற்கருணை ஆசீர்வாதம் எமது சபையின் உருவாக்கத்திற்கு ஓர் ஆதாரம் இந்த உறுதிப்பாட்டைத் தந்த இறைவனுக்கு நன்றியாக, புகழ்ச்சியாக ஆராதனையும், செபமும் நிறைந்த குழுமங்களாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடனும், சகல அழைத்தல்களுக்கும் ஆன்மீகப் பலம் பெற்றுத்தருவதற்குமாக இக் குழுவை 1858ம் ஆண்டு ஸ்தாபகர் உருவாக்கினார்.

❮❮❯❯ தொடர்ச்சி 15ம் பக்கம் ❮❮❯❯




# திருத்தந்தையவர்களின் விஜயத்தின் உணர்வலைகள்

இலங்கை வாழ் மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு தைத் திங்கள் 13ஆம் நாள் மலர்ந்தது. அன்று எம் திருநாடு இறையாசீர்களால் நிறைந்த நன்னாள். திருத்தந்தையின் வருகைக்காக முழு நாடுமே உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும், மகிழ்ச்சியுடனும் பரவசத்திலும் ஆழ்ந்திருந்தது. நீண்ட நாள் ஆயத்தங்கள் முடிவிற்கு வந்தது. திருத்தந்தையின் விஜயம் எம் மக்களின் உள்ளத்திற்கு ஆறுதலாகவும், தேறுதலாகவும் அமைந்தது, திருத்தந்தையவர்கள் காலடி வைத்த முதல் இடத்திலும் முதல் நாளிலும் கேட்டுக்கொண்டது. காயப்பட்ட எம் உள்ளங்களை ஆற்றுப்படுத்துவோம். உண்மை விடயங்களை கண்டறிந்து அதற்குப் பரிகாரம் தேடுவோம் என்பதாகும். எம் பெருமான் இயேசுவின் பொன் மொழிகள் எம் திருத்தந்தையின் வருகையின் போது உயிர் கொடுத்தால் போல் அமைந்திருந்தது. அன்பில் நிலைத்திருங்கள் என்ற வார்த்தை பல்வேறுபட்ட பிரச்சினைகளினாலும் சிதைப்பட்டு நொறுக்கப்பட்ட உள்ளங்களுக்கு ஆற்றுப்படுத்தும் ஒன்றாக அமைந்திருந்தது.

இன்றைய எம் மனித வாழ்வு பல்வேறுபட்ட நிலைகளினால் சிதைக்கப்பட்டு காணப்படுகின்றது. அன்பை அமைதியை ஏங்கிய எம் நாட்டு மக்களின் உள்ளங்களில் ஓர் நம்பிக்கைக் கீற்றாகவே எம் திருத்தந்தையின் பயணம் அமைந்திருந்தது என்றால் அது மிகையாகாது. 2000 ஆம் ஆண்டளவில் இயேசு கொண்டு வந்த அன்பு இன்றும் மலரா மொட்டாகவே இருக்கின்றது. அன்பு எனும் மொட்டு அரும்புவதற்கு பல தடங்கள் நாளுக்கு நாள் உருவாகிக் கொண்டே போகின்றன. அடக்கு முறைகளும், ஆணவமும், அக்கிரமங்களும் அடிக்கடி அரங்கேறும் இடமாக எம் தாய் நாடு இருக்கின்றது. ஊழல்களும், பதுக்குதல்களும் மலிந்து காணப்படுவதுடன் உண்மையைத் திரித்துக் கூறும் மனிதர்கள் வீதியில் வலம் வந்து கொண்டே இருக்கின்றார்கள். உண்மைக்கு குரல் கொடுக்கும் உண்மை உள்ளங்கள் முகவரி இல்லாமல் மறைந்து விடுகிறார்கள். ஏமாற்றுப் பேர்வழிகள் எப்பக்கம் பார்த்தாலும் தலைதூக்கி நிற்கின்றார்கள். இவ்வாறான சூழ் நிலையில்தான் எம் திருத்தந்தையின் வருகையை நாம் எதிர் கொண்டோம். திருத்தந்தையின் தரிசனத்தின் பயனாக எம் நாடு அன்பின், அமைதியின் பாதையில் நடைபோடும் என்ற நம்பிக்கை எம் மத்தியில் மலர்ந்துள்ளது.

திருத்தந்தையின் வருகையை எதிர்பார்த்திருந்த மக்கள் வெள்ளம் வெயில் என்னும் பாராது குழந்தைகள் தொடக்கம் முதியவர்கள் வரையிலும் எம்மதமும் சம்மதமே ன்ற உணர்வில் எல்லோரும் ஒரு தாய் மக்களாக திருத்தந்தையை வரவேற்க வீதியோரங்களில் காத்திருந்தது அன்பின் நிலைத்திருங்கள் என்ற வாக்கு மலர்ந்து விட்டதோ என்ற எண்ண அலைகள் எம்முள்ளங்களை அருவிச் சென்றது உண்மை. நல்லாட்சியை வழங்குவதாக கூறி அரசாட்சியில் அமர்ந்த புதிய தலைவரும் அரசும் நம்பிக்கையின் ஒளியை விருட்சமாக்கியது. திருத்தந்தையவர்களின் வருகையினால் தமிழர் தாயகம் மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தது. ஏனெனில் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் மண்ணில் காலடி பதித்த முதல் திருத்தந்தை என்ற பெயரைப் பெற்றவர் எம் திருத்தந்தையவர்கள் தமிழர் பாரம் பரியத்துடன் இசைமுழங்க ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டார். அங்கே இறையாசீர்களை வழங்கிய திருத்தந்தையின் தனது உரையில் அன்னை மீது அவர்கள் பக்தி வெளிப்பட்டது. அன்னை மரியாள் என்றும் உங்களுடன் இருக்கின்றார். அவள்தான் உங்கள் அனைத்து வீடுகளிலும் அன்னை வடுக்களோடும், பயங்களோடும் வாழும் உங்களின் வாழ்வில் சுகவாழ்வை அளிக்க காத்திருக்கும் எம் அன்னை எம்மிடம் எதிர்பார்ப்பது ஒப்புரவும் புரிந்துணர்வும். இதை நிலை நிறுத்தும் போது எம் வாழ்வு ஒளி மயமாகும் என்ற நற்செய்தியை வழங்கினார். அன்பிற்கோர் எடுத்துக்காட்டு எம் திருத்தந்தையவர்கள். குழந்தைகள் அரவணைப்பிலும், நோயாளிகளை தொட்டு ஆசீர்வதிப்பதிலும் மாற்றுத்திறனாளிகளைத் கட்டித் தழுவி முத்தமிடுவதிலும் இறையன்பை வெளிப்படுத்தியதுடன் இறைவனின் இறையிரக்க உடனிருப்பையும் வெளிப்படுத்தினார். சென்ற இடங்களிளெல்லாம் எம் திருத்தந்தை ஆசீர்களால் மகிழ்ச்சியடைந்த உள்ளங்கள் ஏராளம். இயேசுவின் ஆடையைத் தொட்டால் போதும் அவரைக் கண்டால் போதும் என்று ஏங்கிய அன்றைய மக்கள் போன்று எம்மவர்களும் சன நெடுக்கடிகளையும் இடையூறுகளையும் களைப்பையும் பாராது அவரைப் பார்ப்பதற்காக வந்திருந்தது வியக்கத்தக்கது.

திருத்தந்தையவர்களின் ஏழ்மையான, எளிமையான, தாழ்மையான வாழ்க்கை முறையால் கவரப்பட்ட உள்ளங்கள் பல, அந்த தந்தையைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தில் அலை அலையாக மோதிய உள்ளங்கள் அவரைக் கண்டதும் பேருவகையடைந்தனர். திருத்தந்தையவர்களின் கரங்களையாவது தொட்டு ஆசீர் பெற வேண்டும்மென்ற எண்ணங்களுடன் இரவிரவாக நித்திரை செய்யாது காலி முகத்திடலில் காத்திருந்த மக்களின் அன்பின் ஆழமான விசுவாசம் போற்றப்படவேண்டியது. ஏழ்மையான நிலையில் எம்மத்தியில் வருகை தந்த திருத்தந்தையவர்கள் எமக்களித்த மிகப் பெரும் கொடைதான் எம் மண்ணின் முதல் புனிதர் யோசேவ்வாஸ் அடிகள். தான் வாழ்ந்த கால கட்டத்தில் இப்படியோர் நிகழ்வு நடைபெறும் என கனவிலும் நினைத்திருக்க மாட்டார். எம் புனிதர். இப் புனிதர் பட்ட நிகழ்விற்காக செலவிடப்பட்ட நேரங்கள், பணங்கள், பயணங்கள் ஏன் போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் எம் புனிதர் கண்டிருக்க மாட்டார். கால் நடையாக நற்செய்திப் பணியைப் பறைசாற்றிய புனிதருக்கு இறைவன் அளித்த புகழாரமே புனிதர் நிலையும் விசுவாசத்துடன் கூடிய மக்கள் வெள்ளமும் விண்ணிலிருந்து மிகவும் மகிழ்ச்சிக்களிப்பில் இருந்திருப்பார் எம் புனிதர். அவர் நடந்த பாதைகள் அழியவில்லை. அவர் விதைத்த விசுவாச விதைகள் மடியவில்லை. உயிர் கொடுத்தது உருக்கொடுத்தது இலங்கை மண்ணின் புதல்வர்களுக்கு 38 ஆண்டுகள் குருக்கள் இல்லாது வாழ்ந்த மக்களின் விசுவாச வாழ்விற்கு உயிர் கொடுத்தது. புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் தியாக வாழ்வு, புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் வியர்வையில் உருப்பெற்றெழுந்த இலங்கை திருச்சபை வெற்றியுடன் வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றது. தடங்களும் தடைகளும் மோதினாலும் விசுவாசம் தளரவில்லை. அந்த வெற்றிக்களிப்பை கொண்டாட எம்முடன் ஒருவராக எம்மோடு இணைந்த எமக்கு செபித்த எம் திருத்தந்தையின் விஜயம் இறைவனால் அருளப்பட்ட சிறப்பு வேட்கை அவரைத் தளர விடவில்லை. எம்மக்களைக் காண வேண்டும் என்ற ஆர்வத்துடன் புன்னகை ததும்ப எமக்காக இறையாசீர்களை பெற்றுத்தந்தார் எம்திருத்தந்தையவர்கள்.

அன்பில் நிலைத்திருங்கள் என்ற தொனிப்பொருளில் இடம் பெற்ற எம் திருத்தந்தையின் விஜயம் ஆரம்ப காலகட்டத்தில் அவநம்பிக்கையைத் தந்தாலும் இறுதியல் தந்தையவர்கள் வருகிறார் என்ற செய்தி அனைத்து மதத்தவர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இனமத பேதமின்றி இலங்கை வாழ் மக்களாக ஒரே மந்தைகளாக ஆயனின் ஆசிர்களைப் பெற்ற நாம் அவர் விட்டுச் சென்ற நற்செய்தியை வாழும் மக்களாகவும் மற்றவர்களையும் ஆற்றுப்படுத்தி இறையன்பில் நிலைத்திருக்க முயற்சிப்போம். அன்பில் நிலைத்திருப்போம்.

*ஆக்கம்*
*அருட்சகோதரி சாந்தனா*
*(அ.கா)*



## 03ம் பக்கம் இனக்கமான வாழ்வில்

நற்செய்தி நமக்கு வலியுறுத்தும் மிகப்பெரிய செயல் நம் எதிரியை கூட நாம் அன்பு செய்ய வேண்டும்.

அன்னை திரேசா "நீ எங்கெங்கு செல்கிறாயோ அங்கு உன் அன்பை பறைசாற்று. முதலில் உன் இல்லத்தில், உன் பிள்ளைகளிடத்தில், உன் அயலாரிடத்தில், குடும்பத்தில், உன் முகத்தில் உன் கண்ணில் என்ற அனைத்து நிலையிலும் உன் அன்பை பிறரிடம் தெரிவி, எனவே அன்பை முன்வைத்து வாழ்க்கையை வாழ, பிறபணி புரிந்து இத்தவக்காலத்தில் வாழ்வோம்,

## 05ம் பக்கம் ஏனைய திருத்தந்தையர்களில்...

**9. உலக முரண்கைத் தீர்வு (யோவான் 3:16)**

2014 மார்கழி 17ம் நாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபமா கியூபாவினுடனான முழு ராஜ தந்திர உறவுகளைச் சீர்செய்யுமாறும் கியூபாவின் ஹவானாவில் அமெரிக்க தூதரகத்தைத் திறக்குமாறும் பணிப்புரை விடுத்தார். இது கடந்த அரை நூற்றாண்டில் நடைபெறும் முதல் நிகழ்வு. மேலும் அவர், "கடந்த காலத் தடைகள் கட்டுக்களை வெட்டி அவிழ்த்து" பனிப்போரின் கடைசித் தடங்களையும் ஒரு புறம் ஒதுக்கி ஒழுங்குபடுத்தப் போவதாக சூளுரைத்துள்ளார். இலத்தீன் அமெரிக்காவின் முதல் திருத்தந்தையான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களே அமெரிக்கா மற்றும் கியூபா இடையே இந்த வரலாற்று சமரசத்தைச் செய்து கொள்ள ஒரு முக்கிய பங்கு வகித்தார். வத்திக்கான் தனிப்பட்ட முறையில் கியூபா மற்றும் அமெரிக்க அதிகாரிகள் இடையே இரகசிய பேச்சுவார்த்தைகள் நடத்த அனுசரணை வழங்கியது. திருத்தந்தை அவர்கள் தனிப்பட்ட முறையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் கியூபா ஜனாதிபதி ராவுல் காஸ்ட்ரோ ஆகியோருக்குக் கடிதங்கள் எழுதி ஓர் உடன்பாடு காண அவர்களை வலியுறுத்தினார். "கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்." (யோவான் 3:16)

**10. உலகளாவிய காலநிலை மாற்றத்திற்கெதிரான போர் (திருப்பாடல் 24:1)**

தொடக்க நூல் 1:26-30ல் கடவுள் மனிதனுக்கு படைப்பனைத்தின் மீதும் அதிகாரம் கொடுத்து அவனைத் தன் சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார் என்று கூறுகிறது. ஆனால் கவலைக்கிடமான விடயம் எதுவெனில் மனிதகுலம் தனக்கு படைப்பின் மீது முழு சுதந்திரமோ அல்லது இறுதி அதிகாரமோ இல்லை என்பதை மறந்தது ஆகும். மனிதருக்கு படைப்பின் மீது இருப்பது கடவுளின் சார்பாக ஆட்சியுரிமை மட்டுமே. "பசுமைத் திருத்தந்தை" என்று பெயர் பெற்ற தனது முன்னோடித் திருத்தந்தையான 16ம் பெனடிக்ட் அவர்களின் அடிச்சுவட்டில் நடைபோடும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் படைப்பை கடவுளின் சிறந்த கொடையெனப் பேணிக் காத்து வளர்க்குமாறு மக்களைத் தூண்டி வருகின்றார். கடவுள் எப்போதும் மன்னிக்கின்றார் ஆனால் படைப்புக்கள் ஒருபோதும் மன்னிப்பதில்லை என எச்சரிக்கை விடுக்கின்றார். "படைப்பைப் பேணிப் பாதுகாருங்கள். ஏனென்றால் நாம் படைப்புக்களை அழித்தால் அவைகள் எம்மை அழித்துவிடும். ஒருபோதும் இதை மறந்து விடாதீர்கள்." "மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை." (திருப்பாடல் 24:1)

## 11ம் பக்கம் நற்செய்தி என்பது..

நாம் இறைவாக்கினர்களாக மாறவேண்டும். அப்போதுதான் அனைவரும் அமைதியுடன் வாழமுடியும். அமைதி என்பது போர் இல்லாத் தன்மை என்பதல்ல. மாறாக மக்கள் மத்தியில் முழுமையான நீதியுடன் கூடிய இறைவன் விரும்பும் சீரான உலகை அமைப்பதாகும். எனவே ஒவ்வொரு கிறிஸ்தவரும் பொறுப்புள்ள குடிமக்களாக செயல்படவேண்டும்.

ஈற்றிலே கத்தோலிக்க திருச்சபையானது காயங்களைக் குணப்படுத்தும் திருச்சபையாகவும், நம்பிக்கையூட்டும் திருச்சபையாகவும், கருணைமிகு திருச்சபையாகவும், தொலைந்து போனவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் திருச்சபையாகவும், காப்பாற்றும் திருச்சபையாகவும், பிரிந்துபோன ஆடுகளை கூட்டிச் சேர்க்கும் திருச்சபையாகவும் மாறவேண்டும். (ஆயர். அந்தோனி டிவோட்டா,திருச்சி ஆயர்)

கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் மீது அளவற்ற அன்பு கொண்டவர்களாகவும், மரியாவை முன்மாதிரியாகக் கொண்டவர்களாகவும் நற்செய்தியை அறிவிக்க விரைந்திடுவோம்.

நன்றி : - நற்செய்தியின் மகிழ்ச்சி (அப்போஸ்தலிக்க அறிவுரை ஏடு) தோழன் (தை 2015)

## 07ம் பக்கம் இலங்கையின் புனிதர்...

கிறிஸ்துவின் பணியைப் போலவே ஒரு நற்செய்தியாளனின் பணியும் ஒரு துன்புறும் ஊழியனின் பணியாக இருக்குமென்பதற்கு வாஸ் அடிகள் பணி வாழ்வில் மேற்கொண்ட பாத்திரங்களும் அவர் நடத்தப்பட்ட விதங்களும் சான்றுகளும் அவர் கூலிவேலை தேடுகிறவராக, பிச்சைக்காரனாக, கழுத்தில் செப மாலையுடன் பிச்சையெடுக்கும் போது ஒரு ஏளனத்துக்குரிய பிச்சைக்காரனாக தேடப்படுகின்ற அரச சட்டத்தை மீறிய குற்றவாளியாக, ஒற்றனாக சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட கைதியாக, சிறையிலும் வீட்டுக்காவலிலும் உள்ள ஒரு கைதியாக எல்லாம் நடத்தப்பட்ட வேண்டியிருந்தது. அடிகளாரின் இந்த நிலைகள் அவரது பணிக்கும் அவருக்குப் பின் வந்தவர்களது பணிக்கும் உரம் சேர்த்தன. அவர் வெளிப்படுத்திய தாழ்ச்சி அவரது பணிக்கும் அவருக்குப் பின் வந்த மறைப்பணியாளர்களின் பணிக்கும் உரம் சேர்த்தது. பின்னடைவுகளைக் கண்டு பின்வாங்காத ஒரு புனிதருடைய வாழ்வின் சிறப்பம் இதுதான். யோசேவ்வாஸ் அடிகளாரின் வாழ்வும் பணியும் இதற்கு சிறந்த உதாரணம்.

## 12ம் பக்கம் உண்மைக் காதல்...

'ஒட்ட ஒட்டச் சூப்பிவிட்டு விட்டெறிஞ்ச மாங்கொட்டை' என்ற நிலையை அடைகின்றனர். ஒரு பெண் ஆதங்கத்தைக் கூறும் போது, "என் கணவர், என் இதயத்தை மட்டும் இன்னும் தொடவில்லை. அவர் என்னிடத்தில் எலும்பைத் தேடினாரே தவிர இதயத்தைத் தேடவில்லை. எனவே, தோலை விரும்பும் அன்பு உண்மையான அன்பல்ல" என்றார். ஆளை விரும்பும் அன்பே உண்மையான அன்பாகும். அன்பின் நாகரீகம் அனைவருக்கும் தேவை என்றாலும் அது மணமக்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது.

கிறிஸ்துவின் அன்பு தன்னலமற்ற அன்பு. "மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும் பலருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்" (மாற்கு 10:45) கிறிஸ்துவின் அன்பு மணமக்களை ஆட்கொள்வதாக.

மார்ட்டின், ஸ்டெல்லா என்ற இருவரும் ஒருவர் ஒருவரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டனர். முதல் கிறிஸ்மஸ் வந்தது. ஒருவர் ஒருவருக்கு அன்பளிப்பு வழங்க விரும்பினர். ஆனால், அவர்களிடத்தில் பரிசு வாங்கப் பணமில்லை. ஸ்டெல்லாவுக்கு அழகிய, நீண்ட கூந்தல் இருந்தது. ஆனால், கூந்தலுக்குத் தேவையான ஒப்பனை, வாசனைப் பொருட்கள் வாங்க அவர்களிடம் காசு இல்லை. மார்ட்டினிடம் நல்ல கைக்கடிகாரம் ஒன்று இருந்தது. ஆனால், அதைக் கையில் கட்டிக்கொள்ள பொருத்தமான செயின் இல்லை. இந்நிலையில் ஸ்டெல்லா தன் அழகிய கூந்தலை வெட்டி, அதை விற்றுத் தன் கணவருடைய கைக்கடிகாரத்திற்குத் தேவையான செயின் வாங்குகின்றாள். மார்ட்டினோ என்ன செய்வதென்றறியாமல் தன் கைக்கடிகாரத்தை விற்று, அவள் கூந்தலுக்குத் தேவையான ஒப்பனைப் பொருட்களை வாங்கிவிடுகிறான்.

இருவருமே பரிசுப் பொருட்களைப் பரிமாறிக் கொண்ட போது அவளிடம் கூந்தல் இல்லை. அவனிடமோ கைக்கடிகாரம் இல்லை. இருப்பினும், அவர்களின் காதல் கனிகின்றது. அவர்களுடைய தன்னலமற்ற தியாகப் பண்பு சுடர்விட்டு ஒளிர்கிறது.

அன்பின்றிக் கொடுக்கலாம். ஆனால் கொடுக்காமல் அன்பு செய்ய முடியாது. "பெறுவதிலும் தருவதே இன்பம்" (திப 20:35) 'கொடுப்பதாலே பெற்றுக்கொள்கிறோம்' - அசிசியார்.

பெறுவதிலும் கொடுப்பதே இன்பம். எனவே, தன்னலப் பேய் தலைகாட்டாமல் தடுப்போம். தாராளமாகக் கொடுப்போம்.

### திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி

❖ "நம்மிடமுள்ள புறக்கணிப்புக்களைக் களை -வதற்கு தவக்காலத்தில் தெளிவான வழிகளைக் கண்டுபிடிப்போம்" (மாசி 17, 2015)

❖ "எல்லாக் காலத்தையும் சேர்ந்த எல்லா மக்களுக்கும் மகிழ்வைக் கொணரவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார்." (மாசி 16, 2015)

❖ "இயேசு கடந்துபோன ஒரு நபர் இல்லை, அவர் இப்போதும் எப்போதும் நமக்கு வழியை வெளிச்சமாக்க தொடர்கிறார்" (மாசி 8, 2015)

❖ "நாம் கடவுளில் விசுவாசம் வைத்திருப்பதென்பது, நமக்குத் துன்பங்கள் இருக்காது என்பது பொருளல்ல, ஆனால், அந்நேரங்களில் நாம் தனியாக இல்லை என்ற அறிவில், அத்துன்பங்களை எதிர்கொள்வதற்குச் சக்தியைக் கொண்டிருப்பதாகும்". (மாசி 6, 2015)




## 13ம் பக்கம் அமல மரித்தியாகிகள்...

வழிகளிலும் உதவியவர் புனித இயூஜின் டி மசனட். இலங்கைத் திருச்சபை மட்டில் அவருக்கு அளவு கடந்த கரிசனையும் அன்பும் இருந்ததை அவர் ஆயர் செமெரியாவுக்கு எழுதிய கடிதங்களில் காணமுடிகிறது. ஈழ மண்ணில் அமலமரித் தியாகிகள் கால் பதித்து ஏறத்தாழ 168 வருடங்கள் கடந்து விட்டன. இவர்கள் நற்செய்திப் பணி, சமூகப் பணி, கல்விப் பணி, உருவாக்கற் பணி என தனி மனிதர்களையும், சமூகங்களையும் கட்டியெழுப்பிய சிற்பிகளாகத் திகழ்கிறார்கள். இலங்கையில் யாழ்-மாகாணம் கொழும்பு-மாகாணம் என இரு மாகாணங்களாக அமலமரித்தியாகிகள் இலங்கை முழுவதிலும் பணிபுரிகிறார்கள். இலங்கையில் கொடிய யுத்தகாலத்தில் வடக்கில் அமதிகள் மக்களோடு வாழ்ந்து அவர்களின் தேவைகளில் கரம்கோர்த்து, இன்று தங்கள் பணிகளை காலத்திற்கு ஏற்ற விதத்தில் விசாலமாக்கி பணியாற்றிவருகிறார்கள். கலாபனையும் துன்பங்களும் சூழ்ந்த வேளையில் இலங்கை திருச்சபைக்கு கரம்கொடுத்தவர்கள் அமலமரித்தியாகிகளே. அமலமரித்தியாகிகள் சபையினர் இறையாட்சிப்பயணத்தில் எல்லா மக்களையும் அழைத்து இறைச்சித்தத்தை நிறைவேற்ற இறைவன் அருள்புரிவாராக.

## 13ம் பக்கம் இலங்கை மண்ணில்...

தியானயோக சகோதரிகள் சபையின் மறைபொருளாக, அதன் உயிர் நாடியாக இருக்கின்றனர். 1975ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பித்த இக் குழு தற்போது கந்தானையில் உள்ள நாகொட என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இன்று திருக்குடும்ப சபையின் தியானயோக அழைப்பின் இல்லங்கள் உலகிலே பிரான்ஸ், ஸ்பெயின்,இலங்கை, ஆர்ஜென்ரீனா ஆகிய நான்கு தேசங்களில் அமைந்துள்ளன.

**திருக்குடும்ப சபையின் அர்ப்பணிக்கப்பட்ட திருமட சார்பற்ற குழு**

இக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் இறைவனின் அழைப்புக்கு ஆம் என்று பதில் அளித்து வாழ்வில் முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவ பெண்களாக சபையின் நோக்குக்கும், அருங்கொடைக்கும் ஏற்ப துறவற வாழ்விற்கு வேண்டிய நற்செய்தி அறிவுரைகளான கீழ்ப்படிதல், விரத்தத்துவம், ஏழ்மை என்னும் வாக்குறுதிகளுக்குள் தம் வாழ்வை ஒருமுகப்படுத்தி... உலகின் மத்தியிலே புளிக்காரமாக வாழ்ந்து வருகின்றார்கள். உலகிலே தமது குடும்பங்களிலே வாழ உரிமையுண்டு. இவர்களது அழைத்தலின் தனித்துவமும், மகத்துவமும் இறையரசின் பண்புகளை உலகிலே குடும்பங்களில் தொழில் நிலையங்களில் பங்குத் தளங்களில் மறைவாக வாழ்ந்து பணி செய்வதே.

**திருக்குடும்ப பொது நிலையினர் வாழ்வும் பணியும்**

அனைத்தையும், அனைவரையும் ஒரு தந்தை பிள்ளைகள் என்ற உறவுக்குள் கொண்டு வருகின்ற பணியை "இறைவன் மாத்திரமே" என்ற மனநிலையிலும் ஆன்மீகத்திலும் குடும்பங்களாகத் தம்மை அர்ப்பணித்து பணிபுரிகின்ற குழுக்களே இவர்கள். இவர்கள் தாய், தந்தை பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து குடும்பமாக திருக்குடும்பத்தை முன்மாதிரிகையாக கொண்ட உறவுள்ள விசுவாசம் நிறைந்த, பகிர்ந்து வாழ்கின்ற ஆரம்ப கிறிஸ்தவ குடும்பங்கள் போல வாழ்வதே இவர்கள் வாழ்வும், பணியும்.

**திருக்குடும்ப சபை அர்ப்பணிக்கப்பட்ட குருக்கள்**

இவர்கள் சேர்ந்து கொண்ட தலத் திருச்சபையின் ஆயருக்குப் பணிந்து, தமது பணித்தளங்களில் திருக்குடும்பத்தின் நல் முன்மாதிரியான வாழ்வை முன்னெடுக்கின்றார்கள். மிகவும் ஆன்மீக வாஞ்சையுடன் மக்களின் உடல், உள, ஆன்மீக விடுதலையைக் கொடுக்கும் பணியை ஆர்வத்துடன் செய்ய தம்மை அர்ப்பணிக்கின்றார்கள். மிகவும் எளிமையான வாழ்வை பின்பற்றுவதுடன், ஆயருக்குப் பணிவுள்ளவர்களாகவும், திருக்குடும்ப சபையின் ஏனைய அங்கத்தவர்களின் ஆன்மீக வழிகாட்டிகளாகவும் வாழ்கின்றார்கள்.

இந்த ஐந்து அழைப்புக்களையும் தன்னகத்தே கொண்ட திருக்குடும்ப சபை இலங்கை மண்ணில், 153 ஆண்டுகளின் நிறைவைக் கண்டு வாழ்கின்றது. இதன் வாழ்வினதும், பணியினதும் வளர்ச்சியும் நிறைவும் தலத்திருச்சபைகளின் ஆயர்களையும், குருக்களையும் மக்கள் எல்லோரையுமே சாரும். தொடர்ந்தும் இம் மண்ணின் மக்களாக காலத்தோடு பணியாற்ற உங்கள் அனைவரின் உறவுள்ள ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்.

## கொழும்பு உயர் மறைமாவட்ட கத்தோலிக்கப் பணிமனை நடத்தும் தனியார் பாடசாலை ஆசிரியர்கள், மறையாசிரியர்களுக்கான கத்தோலிக்கக் கல்வி மற்றும் ஆசிரிய பயிற்சிக்கான டிப்ளோமா கற்கை நெறி

### (தமிழ் மொழி மூலம்) 2015

**கற்கை நெறி பாடப்பரப்பு**

- ✷ கல்வி உளவியல் அடிப்படைகள்
- ✷ கல்வித் தத்துவ அடிப்படைகள்
- ✷ கத்தோலிக்கக் கல்வி வரலாறு
- ✷ கத்தோலிக்க ஒழுக்கவியல்
- ✷ ஆற்றுப்படுத்தலும் ஆலோசனை வழங்கலும்
- ✷ கல்விப் புள்ளி விபரவியல்
- ✷ கற்றல் கற்பித்தல் கோட்பாடுகள், முறைகள்
- ✷ வகுப்பறை முகாமைத்துவம்
- ✷ கத்தோலிக்க தனியார் பாடசாலை முகாமை

**Course Fee Rs. 15000.00**

**மதிப்பீடு**

1. நான்கு பிரதான பாடங்களில் 4 ஒப்படைகள்
2. மாதிரி கற்பித்தல் மேற்பார்வை
   உள்ளகம் - 1 பாடவேளை
   வெளியகம் 2 பாடவேளை
3. இறுதி எழுத்துப் பரீட்சை 4 பிரதான பாடங்கள்

### கற்கை நெறி கால அட்டவணை

| | | |
|---|---|---|
| ஏப்ரல் | - | 18, 25 |
| மே | - | 02, 09, 16, 23, 30 |
| ஜீன் | - | 06, 13, 20, 27 |
| ஜீலை | - | 04, 11, 18, 25 |
| ஆகஸ்ட் | - | 01, 08, 15, 22, 29 |
| செப்டம்பர் | - | 05, 12, 19, 26 |

**விண்ணப்ப முடிவு திகதி : பங்குனி 30**

**தெரிவுப் பரீட்சை : ஏப்ரல் 11 –**

**பாடங்கள் : 1. பொதுஅறிவு** (GK), **2. உளச்சார்வு** (IQ)

**நேரம் : பிரதி சனிக்கிழமை தோறும்**
**காலை 9.00 மணி முதல் 16. 00 மணி வரை**

**இடம் : புனித சூசையப்பர் கல்லூரி மருதானை**

### டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்

✷ கொழும்பு பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றின் அனுபவமிக்க வளவாளர்களாலும், பாடசாலை அதிபர்களாலும், விரிவுரைகள் நடத்தப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**The Director of Catholic Education,**
**Archdiocesan Education office**
**Arch Bishop House, Colombo - 08**

தொடர்புகளுக்கு :
திரு ஜீ. போல் அன்ரனி, (கற்கை நெறி இணைப்பாளர்) முன்னாள் பிரதிப் பரீட்சை ஆணையாளர் - 0776925539, 0714475324
செல்வி.ஷாமலி - 011 - 2699129

(Q14N8158)

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்







## தற்போது எமது கத்தோலிக்க புத்தகசாலையில் 2015ஆம் ஆண்டுக்கான கத்தோலிக்க தகவலேடு (ALMANAC) மற்றும் சிறிய தொலைபேசி கையேடு (MINI TELEPHONE DIRECTORY) ஆகியவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

**கவனத்திற்கு : கத்தோலிக்க தகவலேடு** (ALMANAC)
**சிறிய தொலைபேசி கையேட்டுடன்**
**விலை ரூபா. 150.00**
**சிறிய தொலைபேசி கையேடு மட்டும்**
**விலை ரூபா 25.00**

**அத்தோடு செபப் புத்தகங்கள், திருச்சுருபங்கள், புனிதர்களின் படங்கள், இறுவெட்டுக்கள், (ஒலி, ஒளி இறுவெட்டுக்கள்) இறந்தோர் நினைவு கல், புதை குழி கட்டுமானப் பொருட்கள், மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள் உட்பட பல்வேறு விதமான பரிசுப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.**



### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927
பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்